பக்கங்கள் 6 விலை சதம் 40

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1978-2-15
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 3 ரபி அவ்வல் 6 இதழ் 5
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-2-78

...யின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு....
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

# 'வி. பீ.'

## கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்



[யாழ்ப்பாணம்]

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகரும் செந்தமிழர் இயக்கச் செயலாளருமான திரு. வி. பொன்னம்பலத்தைக்கட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

**சன்சோனி கமிஷன்: நேற்றைய விசாரணை**

# "பொலிசாரின் 'யூனிபோமி'ல் இலக்கமில்லை!

# 'கும்பிடுமாறுகூறி பொலிசார் துப்பாக்கியினுல் அடித்தனர்'

## மின்சாரப் பொறியியலாளர் சாட்சியம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

[யாழ்ப்பாணம்]

"நாகவிகாரைச் சந்தியில், என்னை வழிமறித்து நிறுத்திய பொலிசார், தங்களைக் கும்பிடுமாறு கூறி, துவக்குப் பிடியால் வலது கையில் அடித்தார்கள்" என்று யாழ்ப்பாண மாநகரசபை மின்சாரப் பொறியியலாளர் திரு. சிவப்பிரகாசம் ஆனந்தமூர்த்தி, நேற்று சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் கூறினர்.

"எனது மோட்டார் சயிக்கிளைத் துவக்கினுல் அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தினர்கள். துப்பாக்கிமுனையில் என்னை மறித்த பொலிசார், "சிங்களம் தெரியுமா?" என்று என்னைச் சிங்களத்தில் கேட்டார்கள்; நான் சிங்களத்தில் பதிலளித்தேன். அப்போது மற்றெருவர், மோட்டார் சயிக்கிளைத் தாக்கினர். பொலிசார் 'யூனிபோம்' அணிந்திருந்தனர்; ஆனுல் நம்பர் அணிந்திருக்கவில்லை" என்றும் திரு. ஆனந்தமூர்த்தி கூறினர்.

மோட்டார் சைபிக்கிளை தோளில் தூக்கிச் செல்லுமாறு பொலிசார் கூறியதாகவும், எப்படி தூக்கிச்செல்லமுடியும்? என்றதும் தன்னை விட்டுவிட்டு, அவ்வழியால் வந்த வேறு ஒருவரை துன்புறுத்த ஆரம்பித்தார்களென்றும் அவர் கூறினர்.

### மாணவர்களும் வந்திருந்தனர்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சன்சோனி கமிஷன்விசாரணையைப்பார்க்க நேற்று மாணவர்கள். சிறுவர்கள், உட்பட பெருந்திரளானேர் வந்திருந்தனர்.

அநுராதபுரத்தில் கலவர நேரம் கடமையாற்றியவர்களும் நேற்று வந்திருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், உடுப்பிட்டி எம் பி. திரு கே ராஜலிங்கமும் நேற்று வந்திருந்தனர்.

மின்சார பொறியியலாளர் திரு. ஆனந்தமூர்த்தி மேலும் கூறியதாவது: நான் 23 வருடகாலமாக கடமையாற்றிவருகிறேன். யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2 வருடமாக கடமையாற்றுகிறேன். அதற்குமுன் மாத்தறையில் கடமையாற்றினேன்.

17-ம்தேதி காலை 11 30 மணிக்கு மோட்டார் சையிக்கிலில் பருத்தித்துறை வீதியால் சென்றுகொண்டிருந்தேன். புனையிரதக் கடவையடியில் சில பொலிசார் நின்றனர். அதற்கு அப்பால், ஆரியகுளம் சந்தியிலும் பொலிசார் நின்றனர்.

### வழிமறித்தனர்

மோட்டார் சைக்கிலில் வந்த என்னைப் பொலிசார் மறித்தார்கள். 300 யார் சென்றதும் அவர்கள் மறித்தனர். கீழே இறங்கும்படி கூறினர்கள். சிங்களத்தில் பேசினர்கள். மோட்டார் சைக்கிளை துவக்குப்பிடியினுல் இடித்தார்கள். பின் றைபிள் பிடியினுல் கையில் அடித்தார்கள்.

"பொலிஸ்காரரில் ஒருவர் தங்களைக் கும்பிடச்சொல்லிக் கேட்டார் நான் அந்த நேரம் இருகையாலும் மோட்டார் சைக்கிளை பிடித்துக்கொண்டிருந்ததால் கும்பிடவில்லை.

'அவ்வழியால், இளைப்பாறிய காட் மாணிக்கம் வந்துகொண்டிருந்தார். பொலிஸாரின் கவனம் அவர்மீது திரும்பியது என்னை விட்டுவிட்டு அவரைப் போய் துன்புறுத்தத்தொடங்கினர்கள். நான் சென்றுவிட்டேன் கச்சேரிக்குச்சென்று ஏ எஸ். பிக்குப் புகார் செய்தேன்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் கேள்விக்குப் பதிலளிக்கையில், அவர் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் நெருப்பு அணைப்பதற்கு தீயணைக்கும் கருவி இல்லை. தண்ணீர் பாவித்துத்தான் அணைக்கலாம்.

யாழ்ப்பாணம் மாநகரசபையில் தீயணைக்கும் படையிருந்திருந்தால் லட்சக்கணக்கில் சேதமேற்படாமல் பாதுகாத்திருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (க)

# 'என்னை அடித்து குளத்தில் வீசினர்'

## பஸ் கண்டக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"கன்னாதிட்டியில் பொலிஸார் இரு நகைக்கடைகளை உடைத்து, அங்குள்ள 'சோ கேஸை'களை அடித்து பைல், வாங்கு, மேசைகளை வீதியில் போட்டுக் கொளுத்தி, கொள்ளையடித்த நகைகளை ஒரு 'சூட்கேஸி'ல் போட்டுக் கொண்டு, ஒரு மேசை விசிறியையும் கொண்டு வந்தனர்."

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த இ. போ. ச. சாரதி திரு ஞானமுத்து ஜேம்ஸ் மேற்கண்டவாறு கூறினர்.

சாரதி ஜேம்ஸ் மேலும் கூறியதாவது:

"17ந் தேதி நாவற்குழியிலிருந்து வந்த அகதிகளைக் குறிகாட்டுவானுக்கு கொண்டு சென்றேன். அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து கோண்டாவில்டிப்போவுக்குச் சென்று கொண்டிருந்தேன்.

### பொலிஸார் பஸ்ஸை நிறுத்தினர்

"ஆரியகுளம் சந்தியில் பொலிஸார் பஸ்ஸை நிறுத்தினர்கள். யூனிபோம் அணிந்திருந்த 15 அல்லது 20 பொலிசார் பஸ்ஸில் ஏறி, கன்னாதிட்டிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார்கள். அங்கு நகைக்கடைப் பகுதியில் பஸ்ஸை நிறுத்தச் சொன்னர்கள். நிறுத்தியதும் இறங்கிப் போனர்கள். நகைக் கடையொன்றின் பூட்டை உடைத்துத் திறந்தார்கள். அதனை எனக்குப் பார்க்கக் கூடியதாக இருந்தது. நான் அப்போது பஸ்ஸை ஓட்டிச் செல்ல முயன்றேன். இரண்டு பொலிஸ்காரர் ஓடிவந்து பஸ்ஸில் ஏறிக்கொண்டார்கள். செல்லவிடாமல்மறித்தார்கள்.

"கடையைத் திறந்துவிட்டு உள்ளே போனர்கள். அலுமாரி, 'சோ கேஸை' அடித்து உடைத்தார்கள்

"வெளியில் கதிரைகளைப் போட்டு எரித்தார்கள். பின்னர் முன்னுலுள்ள நகைக் கடைப் பூட்டைக் கழற்றித் திறந்து உள்ளே சென்றூர்கள். பைல்களை எடுத்துவந்து நெருப்பில் போட்டு எரித்தார்கள். 'சூட்கேஸ்' ஒன்று கொண்டு வந்தார்கள். மேசை விசிறி ஒன்றும் கொண்டுவந்தார்கள். நாகவிகாரையில் வந்து இறங்கி என்னைப் போகச் சொன்னர்கள்.

"அந்த ரோட்டின் இரண்டு பக்கமும் நகைக் கடைகள் தான். எல்லாமாக 40 நகைக் கடைகள் இருந்தன.

கொள்ளையடித்த நகைகளைக் கொண்டுசெல்லச் 'சூட்கேஸை'ப் பாவித்தார்கள். மற்றும் கதிரை, மேசை, பைல்களை எரித்தார்கள்.

# 'நகைக்கடைகளை உடைத்து பொலிசார் கொள்ளையடித்தனர்!'

## பஸ்சாரதி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"நான் இ. போ. ச. கண்டக்டர் என்றும், வேலைக்குச் செல்வதாகவும், அடிக்கவேண்டாமென்றும் ஆங்கிலத்தில் கூறினேன். அவர்கள் அதனைப் புரிந்துகொள்ளாததுபோல், தொடர்ந்து அடித்து புல்லுக்குளத்தில் தூக்கிப்போட்டார்கள் நான் எழும்ப முயற்சிக்கையில், தலையில் பிடித்து நீரில் அமிழ்த்தினர்கள்."

சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த இ. போ. ச. கண்டக்டர் ஜேசுதாசன் மேற்கண்டவாறு கூறினர்.

கண்டக்டர் ஜேசுதாசன் மேலும் கூறியதாவது:- "15 ம் திகதி காலையில் நான் வேலைக்குப் போனேன். காலை 4-30 மணிக்கு நான் பஸ் நிலையத்திற்குச் சென்று வேலையைப் பாரம் எடுக்கவேண்டும். முனீஸ்வரன் வீதிக்குச் செல்லும் வழியில் சிலர் பட்டனுடன் நின்றூர்கள், என்னை அடித்தார்கள்.

"ஆங்கிலத்தில் நான் இ. போ. ச. கண்டக்டர் என்றும் அடிக்கவேண்டாமென்றும் கூறினேன். அவர்கள் தொடர்ந்து அடித்தார்கள். எதுவும் கூறவில்லை அடிதாங்க முடியாமல் ஓடப்பார்த்தேன். பஸ் நிலையம் நோக்கி ஓடினேன் சிறிது தூரம் சென்றதும், கால் தடுக்கி விழுந்துவிட்டேன். தோள்மூட்டில் அடித்து குளத்திற்குள் தள்ளிவிட்டார்கள். நான் திக்குமுக்காடி எழும்ப முயற்சித்தபோதுமீண்டும் தலையில் அடித்து, தலையில் பிடித்து நீரில் அமிழ்த்தினர்கள். ஒருமாதிரி வெளியில் வந்தேன். அச்சமயம் சயிக்கிளில் ஒருவர் வந்துகொண்டிருந்தார். அவர் மீது பொலிஸாரின் பார்வை பட்டது. அவரைத் தாக்கத் தொடங்கினர்கள். நான் வெளியில் வந்தேன். நான் வெளியில் வருவதைக் கண்டதும் என்னை நோக்கிவந்தார்கள். பின் சயிக்கிளில் வந்தவரை நோக்கிச் சென்றனர். அவரை அடித்தனர். தபால் ஊழியர் என்னை யாழ் பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச்சென்ருர். நடந்தவற்றைக் கூறினேன். முதலில் பொலிஸார் என்று கூறவில்லை. பொலிஸ் உடை அணிந்தவர்கள் என்றேன் அவர்கள் என் வாக்குமூலத்தைப் பதியவில்லை. விருந்தையில் படுத்துவிட்டேன். பின் கண்விழித்தபோது ஆஸ்பத்திரியில் இருந்தேன். யாழ்ப்பாண எம். பி. வந்து என்னைப் பார்த்தார். அவருக்கு நடந்தவற்றைக் கூறினேன்; 2 நாள் ஆஸ்பத்திரியிலிருந்தேன்.

"டாக்டர் ஆலோசனையையும் மீறி நான் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினேன். அங்கும் பொலிஸாரின் கெடுபிடி தாங்கமுடியவில்லை. என் காசு காணமல் போனது. முதல் தினம் சேர்ந்த பணம் 35 ரூபா 95 சதம் காணமல் போய்விட்டது.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், "யாழ்ப்பாணத்தில், சமய அடிப்படையில் ஒருவருக்கொருவர் சண்டை நடந்ததில்லை" யென்று கூறினர். [க]

# வரி விளம்பரம்

## தேவை

கண்ணுடித் தொழிற் சாலைக்கு 13 வயதுக்கு மேற் பட்ட ஆண்கள் வேலை பழகு வதற்கு உடனடியாக தேவை. வேலை பழகும்போது சம்பளம் ரூபா 4-00 நேரில் வரவும். விபரங்களுக்கு! பெனின்சுலா கண்ணுடித் தொழிற்சாலை, 25, ஸ்ரான்லி ரோட், யாழ்ப் பாணம். 8439

## தேவை

ஒய்வு பெற்ற கட்டட ஓவ சியர் ஒருவர் தேவை. நேரில் வரவும். எஸ் சுப்பிரமணியம் அன் கோ 53, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8510

ஆங்கில அறிவும் இசை யார்வமும் உள்ள மனேச்சர் ஒருவர் உடனடியாக தேவை. விபரங்களுக்கு! பரமேஸ் கோணேஸ் புரடக்ஷன்ஸ், 9, ஸ்ரான்லி ரோட், யாழ்ப் பாணம். 8509

## பனம்பாணி விற்பனைக்கு

புகையிலை உற்பத்தியாளர்களே! உங்களுக்குத் தேவையான தரமான பனம்பாணி எம்மிடம் விற் பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரடியாகவோ கடித மூலமோ முகாமையாளர், தெங்கு பனம் பொருள் உற் பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

8505 முகாமையாளர்.

வெளிவருகின்றன

கல்வித் திணைக்களத்தினல்

**துணைப்பாட நூல்களாகச்**

சிபார்சு செய்யப்பெற்ற

## இலக்கிய மஞ்சரி

IIIஆம், IVஆம், Vஆம் புத்தகங்கள் கையிருப்பில் இருந்தவை விற்று முடிந்தமையால் மறுபதிப்பாக அச்சிடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பெற்றிருக்கின்றன. விரைவில் வெளிவரும்.

**வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்,**
சுன்னுகம்.

## கேள்விப் பத்திரம்

**பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**

மேற்படி சங்கத்தின்கீழ் இயங்கும் பனைவெல்ல உற்பத்தி நிலையங்கள் தற்போதைய பருவகாலத்துக்கு ஆரம்பமாக இருப்பதால் மேற்படி நிலையங்களுக்குத் தேவையான விறகினைப் பெற்றுக்கொள்வதற்கு விறகு விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. பெரும்படியான கொத்து விறகு அந்தர் என்ன விலையாக வழங்க முடியும் என்பதை 20-02-78-க்கு முன் கிடைக்கக் கூடியதாக முகாமை யாளர், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை என்ற விலாசத் துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும். இது விபரங்களுக்கு 24-02-78 நண்பகல் 12 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் சமுகந்தரவும்.

**முகாமையாளர்,**
தெ. ப. பொ. சங்கம்,
8504 பருத்தித்துறை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

இல: ஈடு 682

1. வயிரவப்பிள்ளை சுப்பிரமணியம்
தெல்லிப்பழை, கிழக்கு தெல்லிப்பழை.
வழக்காளி

எதிராக

1. முதலி கந்தையா கைம்பெண் பூலோகவதி
புதுக்குடியிருப்பு. உடுவில் எதிராளி

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டின் 682-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டு கட்டளைப்படி, பின்னல் விப ரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 6-ந் திகதி (6-3-78) திங்கட்கிழமை 10 மணியள வில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 7316/- 23-5-75 தொடக்கம் 12-12-75 வரைக்கும் 5000/- வருடமொன்றுக்கு 12% வட் டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை வருடம் ஒன்றுக்கு 5% வட்டியும் வழக்குச்செலவு 398-77½ இதில் 19-11-76ல் கொடுபட்டது 2000/-

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று இணுவில் இறை கரவைசிட்டி நிலப்பரப்பு இரண்டேகால் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் இதற்கு எல்லைகிழக்கு ரோட்டு வடக்கு காற்பாதை மேற்கு கிணறும் வாய்க்காலும் தெற்கு சண்முகம் கந்தையாவின் ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங் கலும்.

**மு. விஜயராஜன்**
நீதிமன்ற விற்பனை விலைமதிப்பாளையாளர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில், 12-2-78. 8507

## பருத்தித்துறை நகரசபை

# விளம்பரம்

பின்வரும் வேலைக்கு 1-3-78 முற்பகல் 12 00 மணி வரை அரக்கு முத்திரை இட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். மற்றும் விப ரங்களை அலுவலகத்தில் நேரில் அறிந்துகொள்ளலாம்.

இரட்டை மாட்டு வண்டிச் (சாரதியுடன்) சேவை.

**மு. ம. தணிகாசலம்,**
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.
8511

## தற்காலிகக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி சோமசுந்தரம் ஒழுங்கை 4-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற வி. எஸ். எஸ். குமார சாமி சிவானந்தன் என்பவ ரது மரண சாதனமற்ற சொத் துக்கள் மற்றும் விடயங்கள் சம்பந்தமானது.

காலஞ்சென்றவர்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதி மன்றம் தத்துவ வழக்கு இல: 411.

யாழ்ப்பாணம் பலாலி வீதி 51-ம் இலக்கத்தைச் சேர்ந்த கதிரவேலுப்பிள்ளை சபாரத் தினம்

மனுதார்

மேற்படி நீதிமன்றத்தில் மேலே காட்டப்பட்ட இறந்த வருடைய. சொத்துக்களை பராமரிப்பதற்காக தத்துவ வழக்குத் தொடரப்பட்டுள்ள தென்றும், அதன் பிரகாரம் தற்காலிகக் கட்டளை எழுதப் பட்டதென்றும் இத்தால் அறி விக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் அக்கறை யுள்ளவர் யாராயினும் இருப் பின் இந் நீதிமன்றத்தில் 1-2-78-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு சமுகமாகி மேற் படி எழுதப்பட்ட தற்காலி கக் கட்டளை ஏன் இறுதிக்கட் டளையாக்கக் கூடாது என்று யாதாவது காரணம் இருப்பின் எடுத்துக் காட்டவேண்டும்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்**
17-1-78 பதிவாளர்.

காரணங் காட்டுந் திகதி 15-3 78 வரை நீடிக்கப்பட் டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்
**பொ. பாக்கியநாதன்**
1-2-78 8512

## சன்சோனி கமிஷன் விசாரணை

ஆரியகுளம் சந்தியில்

# பஸ் ஊழியர் தாக்குதலுக்குள்ளாகினர்

## டிப்போ அத்தியட்சகர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் சந்தியில் இ. போ. ச. ஊழியர்களான ஏ. பாலசுப்பிரமணியம், ஆர். கந் தையா ஆகிய இருவரும் பொலிசாரினல் தாக்கப்பட்ட னர். இவர்களது வாக்கு மூலம் பின்னர் பதிவுசெய்யப்பட் டது.

இவ்வாறு யாழ். இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. என். தியாகராசா கூறினர்.

சட்டத்தரணி திரு. அண்ட லூட் மாணிக்கவாசகம் மறு விசாரணை செய்தார்

சட்டத்தரணி: டி. ஐ. ஜி. போனில் கதைத்தாரா?-ஆம்.

சட்: என்ன கதைத்தார்?- ஏ. எஸ். பி. நூர்தீனுடன் கதைக்க விரும்பினர். போனில் அவர் எங்கே என்று கேட்டார் பொலிஸ் தாக்குதல் பற்றி பல புகார்கள் கிடைத்துள்ள தாகவும், அதனை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமா றும், அவரை மாலை சந்திப்ப தாகவும் கூறினர்.

சட்: எப்போது டிப்போ போனீர்?- மாநாட்டின் பின்.

சட்; அங்கு யாரும் போன் பண்ணினர்களா?-யாழ். எம். பி. வீட்டிலிருந்து போன் பண்ணி கச்சேரியில், அமைச்சர் குருளேயைவந்து சந்திக்குமாறு கூறினர்கள். எம் பி பேச வில்லை அவர் கொடுத்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

சட்: அங்கு யாரும் வந்தார் களா?- அமைச்சரும், உதவி அமைச்சர் வெரபிட்டியாவும் டி ஐ ஜியும் டிப்போவிற்கு வந்து என்னைத் தேடிவிட்டுச் சென்றதாக சொன்னர்கள்.

### வழக்கமான சேவையில்லை

சட்: அப்பொழுது வழக்க மான பஸ் சேவைநடந்ததா? இல்லை.

சட்: எப்பொழுது தொடக் கம் வழக்கமான சேவையில்லை? 16ம் தேதி காலை 9மணி முதல்.

சட்: 17ம் தேதியும் சேவை இல்லை?-இல்லை

சட்: பின் எப்போ சேவை ஆரம்பித்தது?-23ம் தேதி சில பஸ்கள் மட்டும் சேவை செய் தன.

சட்: பின்?- 1ம் தேதி முதல் வழக்கமான சேவை ஆரம்ப மானது.

சட்: அமைச்சர் குருளே கலந்துகொண்டது 2வது மாநாடு?-ஆம்.

சட்; கடத்தப்பட்ட பஸ் ஊழியரும் வந்தனரா?- சாரதி ஜேம்ஸ், கண்டக்டர் செல்வ ராசாவும், பாதுகாப்பு உத்தி யோகத்தர் பரமேஸ்வரனும், மாநாட்டிற்கு வந்தார்கள்.

### மந்திரி கேட்டார்

சட்: மாநாட்டில் என்ன நடந்தது?- மந்திரி சம்பவம் பற்றிக் கேட்டார்.

சட்; சொன்னீர்களா?- சாரதி சிங்களத்தில் கூறினர்.

சட்: அவர் சிங்களவரா?- இல்லை. அவர் தமிழர் சிங்களத் தில் பதில் கூறினர்.

சட்: பின் என்ன நடந்தது? உதவி அமைச்சர் திரு. வெரப் பிட்டியா, சாரதியின் வாக்கு மூலத்தை பதிவுசெய்யுமாறு உத்தரவிட்டார்.

சட்: அகதிகள் எப்படியெல் லாம் வந்தார்கள்? பஸ்ஸில், கப்பலில், ரயிலில், விமானத் தில் வந்தார்கள்.

சட்: யாழ். குடாநாட்டிற்கு பஸ்ஸில் எத்தனை பேர் அகதி களாக வந்தார்கள்?- 50,000 பேர்.

சட்: கப்பலில் எங்கே வந் தார்கள்?- காங்கேசன் துறைக்கு.

சட்: பஸ் அனுப்பினீர்களா? ஆம். ஏ. எஸ். பி. தர்மராசா போன்பண்ணி பஸ்களை காங் கேசன்துறைக்கு அனுப்ப ஏற் பாடு செய்யுமாறு கூறினர்.

### மூன்று கப்பலில்

சட்: எத்தனை கப்பலில்?- 3 கப்பலில்.

சட்: விமானத்தில் எத்தனை பேர் வந்தனர்?- 2000 பேர்.

[ஈ]

...

## காகித உறை தட்டுப்பாடு

[உடுப்பிட்டி]

வடமாராட்சிப் பகுதியில் உள்ள தபால்நிலையங்களில் முத்திரையுடன் சேர்ந்த காகித உறைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் பெரும் சிரம மடைந்து வருகின்றனர்.

தபாநிலையங்களில் முத் திரையுடன் சேர்ந்த காகித உறை இல்லாமையினுல் தனி யார் கடைச் சொந்தக்காரர் கள் காகித உறையின் விலை யைக் கூட்டியுள்ளனராம்.

[உ]

# பிளனவின் மலையளவு நலன்

பிளனவினுக்குச் செலவாகும்
சிறுதொகை மலையளவு நலனளிக்கிறது

பயிர் முளைத்து அறுவடை. செய்யப்படும் வரை களைகளின் தொல்லையைத் தவிர்க்க ஏக்கருக்கு 1 முதல் 1½ இறுத்தல் வரையான பிளனவின் போதுமானது. களைகள் முளைப்பதற்கு முன்னரே அவற்றைத் தெரிந்து கொல்லக் கூடியது. மிளகாய், வெங்காயம், சோயா அவரை, புகையிலை, முதலிய பயிர்களுடன் தோன்றும் எல்லாக் களைகளையும் கட்டுப்படுத்த உன்னதமானது.




மேலும் விபரங்களுக்கு: 'லங்கெம்' உடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது எழுதுங்கள்.

**LANKEM**
நாளைய நிறைவை நோக்கி

ஈழநாடு
The Eelanaadu

## சிட்னி சம்பவம்

சிட்னியில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் மனிதாபிமானமுள்ள அனைவருக்கும் அதிர்ச்சியளிப்பதாகும். இந்த அரசியல் வன்செயலுக்கு அப்பாவியான மூவர் அநியாயமாகப் பலிகொள்ளப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் தலைநகரான சிட்னியில் காமன்வெல்த் நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்திய மகாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்த மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் உட்பட பன்னிரண்டு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

சிட்னியிலுள்ள ஹில்டன் ஹோட்டலில் தலைவர்கள் தங்கியிருக்கின்றனர்.

இந்த ஹோட்டலுக்கு அருகில்தான் இந்தப்பயங்கரக் குண்டு வெடித்தது.

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்க்கு எதிரான சதி முயற்சியே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் 'ஆனந்த மார்க்கம்' என்னும் இயக்கம் வன்செயல்களில் ஈடுபட்டு வந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த இயக்கத்தை திரு. மொரார்ஜி தேசாயின் ஜனதா அரசாங்கம் தடைசெய்தது. ஆனந்த மார்க்கத்தின் தலைவர் ஆனந்தமூர்த்தியையும் இந்திய அரசு சிறை வைத்திருக்கிறது.

கடந்த சில மாதங்களில் வெளிநாடுகளில் ஆனந்த மார்க்கத்தினர் வன்செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பது தெளிவு.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவிலேயே இந்திய ராணுவ அதிகாரி ஒருவர் ஆனந்த மார்க்கத்தினரால் படுகொலைசெய்யப்பட்டார். லண்டனில் இந்தியக் கடைகள் சில வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. மேற்குபெர்லினில் ஆனந்த மார்க்கத்தைச் சேர்ந்த இருவர் தமக்குத் தாமே தீமூட்டி உயிரைவிட்டனர்.

ஆனந்த மார்க்க இயக்கத்தின் நடவடிக்கைகளை ஆஸ்திரேலியாவும் தடைசெய்துள்ளது.

எனவே சிட்னிக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு ஆனந்தமார்க்கத்தைச்சேர்ந்தவர்களே காரணமாக இருக்கலாமென்று நம்புவதற்கு இடமுண்டு.

இந்தியப் பிரதமருக்கு எதிராகவும் அதே சமயம் ஆஸ்திரேலிய அரசுக்கு கரி பூசவும் இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கலாமென்று கருதலாம்.

அரசியல் வன்செயல்கள் சமீபகாலமாக பல நாடுகளிலும்பரவிவருகிறது. இதற்கு உறுதியான நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் மனித இனத்துக்கே ஆபத்து ஏற்படலாம்.

## கொழும்பில் சுயாட்சிக்கழககிளை

[கொழும்பு]

''தமிழ்தேசியஇனம்விடுதலை பெற்ற இனமாக சமத்துவத்துடன் தலைநிமிர்ந்து தமது பாரம்பரியத்தை பேணுவதற்கு தனிநாடு காண்பதே சிறந்த வழியென முதலில் கூறியது சுயாட்சிக்கழகமே. தமிழர்விடுதலைக் கூட்டணியினர் தனிநாட்டு போராட்டத்தில் குதிக்கும்போது சுயாட்சிக்கழகத்தினரும் போராட்டத்தில் நிச்சயம் குதிப்பார்கள்'' என்று கொழும்பு பூந்தோட்ட வீதியில் சுயாட்சிக்கழக கிளையைத் திறந்துவைத்துப்பேசிய திரு. இ. தனபாலன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''இன்று தமிழ்த்தேசிய இனத்தை எதிர்நோக்கியிருக்கும் அபாயம் மும்மொழித்திட்டமாகும். இதற்கு எதிராக சுயாட்சிக்கழகம்விரைவான போராட்டத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது'' என்றார்.

விழாவில், சுயாட்சிக் கழக இளைஞர்பேரவையினர், ஊரை இவானந்தன் உட்பட பலர் உரையாற்றினர். (ம-உ)

## "சிங்கள மக்கள் மத்தியில்

# அரசின் செல்வாக்கு குறைந்து வருகிறது"

— அமிர்

(மாவிட்டபுரம்)

''கடந்த் தேர்தலின்போது சிங்கள மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருந்த அரசாங்கம் கடந்த ஆறு மாதங்களில் மேற்கொண்ட பொருளாதாரநடவடிக்கைகளால்சிங்கள மக்களதுஆதரவை இழந்துவிட்டது. தேர்தலின்போது தலைதூக்கமுடியாத நிலையிலிருந்த எதிர்க்கட்சிகள் இன்று செல்வாக்குப்பெறத்தொடங்கியுள்ளன. இன்னும் ஆறுமாதத்தில் அரசுக்கெதிரான இயக்கம் மேலும் வலுப்பெறலாம். ஆகவே அரசு பலம்வாய்ந்திருக்கும்போது நாம் எமது இலட்சியத்திற்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதைவிட அரசு பலவீனப்பட்டிருக்கும்போது தீவிரப்படுத்தினால்தான் வெற்றி கிடைக்கும். நாம் எமது இலட்சியத்திலிருந்து அணுவளவேனும் விலகவில்லை. உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்க நாம் தயங்கமாட்டோம்.''

இவ்வாறு வறுத்தலைவிளானில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் காங்கேசன்துறை எம். பி.யும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

திரு. கருணானந்தன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கிற்கு முன்னதாக வறுத்தலைவிளான் மக்களது குறைகள் தேவைகள் பற்றி திரு. அமிர்தலிங்கம் கேட்டறிந்தார்.

கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

''கடந்த தேர்தலில் தமிழ் ஈழஇலட்சியத்தைமுன்வைத்து நாம் போட்டியிட்டு வெற்றியீட்டினோம். தேர்தலின்பின் நாம் நடந்துகொள்ளும்முறை பற்றித் தமிழ் மக்களிடையே தவறான கருத்து நிலவிவருகிறது. வாய்ப்பு ஏற்படும்போது எமது பகுதிகளை முன்னேற்ற வேண்டியது எமது கடமை. ஆனால் அதற்காக எமது இலட்சியத்திலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம். அற்பவிஷயங்களுக்காக உயர்ந்த இலட்சியத்தைக் கைவிடக்கூடாது. 10 கிராமத்தில் ஒரு கிராமத்திற்கு நான் உதவிசெய்ததும் மிகுதி 9 கிராமத்தினரும் போட்டி போடுகிறார்கள். இவ்வளவு காலமாக நாம். பெரும்பாடுபட்டு உருவாக்கிய ஒற்றுமையை சிறிய விடயங்களுக்காகச் சிதறடித்துவிடக் கூடாது.

### தமிழ்ஈழம் ஒருநாளில் கிடைக்குமா?

தேர்தலில் தமிழ் ஈழ இலட்சியத்தை முன்வைத்துப்போட்டியிட்டதால் தேர்தலின் மறுநாளே தமிழ் ஈழத்தைப்பெற்றுத்தந்துவிடுவோம் என எவரும் நினைத்திருக்கக்கூடாது. மொழி உரிமைக்காக முன்னர் ஒருமுறை கச்சேரி வாசலில் சத்தியாக்கிரகம் இருந்தோம் ஆனால் இன விடுதலைக்காக சத்தியாக்கிரகம் இருப்பதினால் பயனில்லை. போராட்டத்தின் மூலம்தான் அது சாத்தியமாகும். ஆனால் திடீரென யுத்தப் பிரகடனம் செய்வது புத்திசாலித்தனமல்ல. எமது சக்தியை நாம் உணரவேண்டும். ஆகஸ்ட் கலவரத்தின் போது நாம் எதுவும் செய்யாதிருக்கும்போது ஆட்சியாளர்களது படை, பட்டாளங்களும், சிங்கள வெறியர்களும் எம் மீது தாக்குதலை மேற்கொண்டபோது நாம் அச்சிறு நெருக்கடியைக் கூடச் சமாளிக்கமுடியாத நிலையில் இருந்தோம். ஆகவே போராட்டத்துக்கு முன் எமது இயக்கத்தை வலுப்படுத்தவேண்டும்.

### வெளிநாடுகளின் உறவைப் பெற நல்ல வாய்ப்பு

பலம்வாய்ந்தஅரசை எதிர்த்துப் போராட எமக்கு நேசநாடுகள் வேண்டும். பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு எத்தனையோ நேசநாடுகள் குரல்கொடுத்துவருகின்றன. உலகநாடுகளைப் பக்கபலமாக வைத்து அதன்மூலம் இஸ்ரேலை நெருக்கி தமது உரிமையை நிலைநாட்ட பாலஸ்தீனியர்கள் முயன்றுவருகிறார்கள். அதுபோன்று நாமும் எமக்கு நேசநாடுகளை உருவாக்கிக்கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவிமூலம் பெரிதும் உழைத்துவருகின்றோம். தினம் தினம் வெளிநாட்டுப்பிரதிநிதிகளையும், நிருபர்களையும் சந்தித்து எமது நிலையை தெளிவுபடுத்துவதன் மூலம் வெளிநாடுகளுடன் எமது உறவு வலுப்பெற்று வருகிறது. எம்மை ஒருகாலத்தில் பிற்போக்கு சக்தியென வர்ணித்த உலகநாடுகள் இன்று உண்மையை உணர்ந்து எம்மை சோஷலிச சக்தியாக ஏற்றுக்கொள்கின்றன. இது மட்டுமல்ல நமது நாட்டிலும் கூட சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இடதுசாரிக்கட்சிகளிடையே எமக்குஆதரவைத் தேடிவருகின்றோம்.

''இன்றைய அரசாங்கம் அரசியலமைப்பில் திருத்தம் செய்வதன்மூலம் தார்மீக சமுதாயத்தை அமைக்கப் போவதாகக் கூறுகிறது. ஆகவே கொஞ்சம் பொறுத்திருக்கவேண்டியது நமது கடமை. அரசியலமைப்புத் திருத்தத்தின் பின்னர் எமது நடவடிக்கைகள் வேறுபடும் என்பது உறுதி.

சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிப்பதன் மூலம் எமக்கு நேர்ந்தகதியை வெளிக்கொணர்ந்து உலகநாடுகளின் அபிப்பிராயத்தைத் தேட முயற்சிகள் எடுத்துள்ளோம். அத்துடன் தமிழ்மக்கள் சிங்கள மக்களால் ஆளப்படுகிறார்கள் என்ற உண்மையையும் எடுத்துவிளக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது''

மாவை சேனாதிராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட வேறு பலரும் பேசினர். [அ]

10-ம் திகதிக்குள் பின்

## இந்த இடங்களில் வேலைநிறுத்தம் இல்லை

[யாழ்ப்பாணம்]

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுருட்டுத்தொழிலாளர்கள் 10ம் திகதிக்குப் பின் சம்பளஉயர்வை ஆதரித்து விளம்பரம் விட்ட இடங்களில் வேலைநிறுத்தம் செய்யமாட்டார்கள் என்று அகில இலங்கை ஐக்கியதொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது.

100 சுருட்டுக்கு 50 சதம் கூட்டித்தரவேண்டுமென சுருட்டு முதலாளிமார்களிடம் கோரிக்கை கொடுத்து சுமார் 1400 தொழிலாளர்கள் ஐந்து நாள்கள் வரை வேலைநிறுத்தம் செய்தது தெரிந்ததே.

தொழிலாளர்களின் கோரிக்கையான சம்பளஉயர்வை பெரும்பான்மையானமுதலாளிகள் இதுவரை சம்மதம் தெரிவித்தமையால் சம்பளஉயர்வை ஆதரித்த எல்லாத் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவார்களஅ என்று சங்கத்தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தெரிவித்தார். முன்பு குறைத்துக்கொடுத்த பணத்தையும் உடன் வாங்கிக்கொடுக்கச் சங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் அவர் தெரிவித்தார்: [அ]

## சுருட்டு விலையைக் கூட்டவே முதலாளிமார் போராடினர்

[யாழ்ப்பாணம்]

திட்டமிட்டபடி முதலாளிமார்கள் கடந்த சில நாட்கள் நடத்திய போராட்டம் சுருட்டின் விலையை கூட்டுவதற்கே ஒழிய தொழிலாளரின் கூலி உயர்வு நலன்கருதி அல்ல தொழிலாளர்கள் ஒற்றுமையாக 1975ம் ஆண்டு போராட்டம்மூலம் பெற்றுக்கொடுத்த சரிகூலி 27 ரூபா 50 சதத்தை தொழிலாளருக்கு சட்டப்படி சுருட்டு முதலாளிமார்களிடம் வேண்டிக் கொடுக்க இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கம் ஒருபோதும் தயங்கமாட்டாது. இவ்வாறு தாவடியில் நடந்த இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்து பேசிய திரு. சி. பொ. வ. மா. க. முதலியார் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

''இன்று 50 ரூபா கேட்டாலும் முதலாளிமார்கள் சம்மதம் தெரிவிப்பார்கள். ஆனால் சட்டப்படி கூலி 27 ரூபா 50 சதத்தை தொழிலாளிக்கு கொடுத்தால் அவர்களுக்கும் பயன்தரும். காரியதரிசி திரு. க. தங்கராசா பேசுகையில், இன்று சுருட்டு முதலாளிமார்கள் கூலி குறைப்பதில் இருக்கும் ஒற்றுமை தொழிலாளர்களிடம் இல்லை. ஒரு தொழிற்சாலையில் சரிகூலி கேட்கும் தொழிலாளியை மற்றைய தொழிலாளர்கள் முதலாளியுடன் சேர்ந்து வேலைநீக்கம் செய்வதில் உள்ளனர். இலங்கையில் எந்த ஒரு தொழிலாளியாவது தமது சரி கூலியை பெறத்தவறியதில்லை. ஆனால் சுருட்டுத்தொழிலாளர்கள் தமது கூலியை மாதத்துக்குமாதம் குறைத்துவேண்டுகிறார்கள் என்றார்.

தனுதிகாரி திருவாளர்கள் க. விசுவலிங்கம், க. யோகநாதன், க. பொன்னையா, க. சிவராசா, அ. இரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர்.

''1975ம் ஆண்டு சட்டப்படி பதிவுசெய்யப்பட்ட கூலி 27 ரூபா 50 சதத்தை ஒவ்வொரு தொழிலாளிக்கும் பெற்றுக்கொடுப்பதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது [இ]

## மணிவாக்கு

தன்னை அடக்கியாள முடியாதவன், பிறரை. அடக்கியாளுதல் முடியாத காரியமே,

—மகாத்மாகாந்தி

## தையல், கட்டிட, தச்சுத் தொழில் பயிற்சிகள்

[யாழ்ப்பாணம்]

புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடத் தொழில் பயிற்சி நிலையத்திற்கும், அரியாலையிலுள்ள தச்சுத்தொழில் பயிற்சி நிலையத்திற்கும், அளவெட்டியில் உள்ள தையல் பயிற்சி நிலையத்திற்கும் பயிற்சியாளர் தேவையென்று தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நிலையத்திற்கும் தலா 16பேர் வரையில் பயிற்சி பெறத்தேவை என்றும் 18வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட, குறைந்தது ஜே. எஸ். ஸி. தராதரம் உள்ள ஆண்கள் முதலிரு நிலையங்களுக்கும் தையல் பயிற்சிநிலையத்திற்கும் பெண்களும் அனுமதிக்கப்படுவர் என்றும் யாழ். தொழிற்கந்தோர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஒருவருடகாலப்பயிற்சி பெறுவோருக்கு சிறுதொகை அலவன்சும் வழங்கப்படுமென்றும் தெரிவித்த அவர், யாழ். தொழில் கந்தோருடன்பயிற்சி பெற விரும்புவோரை உடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். [உ]

## கட்டிடத் திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கை. சி. சி. த பெண்கள் பாடசாலை என் வழங்கும் காசிப்பிள்ளை வித்தியாலயக் கட்டிடத் திறப்பு விழா இம்மாதம் 19-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

வடமாநில வித்தியாதிபதி திரு. மாணிக்கவாசகரும், நல்லூர் எம். பி திரு. மு. சிவசிதம்பரமும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். அதிபர் திரு. பொ நடராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டார வித்தியாதிகாரி திரு. கு. சோமசுந்தரம். உப அதிபர் செ. நமசிவாயம் ஆகியோர் உரையாற்றுவர். பெ. ஆ. சங்கச் செயலாளர் திரு. இச. வரதராசா வரவேற்புரை நிகழ்த்துவார். (அ)

## சன்சோனி கமிஷன் விசாரணை

அனுராதபுரம் ஸ்டேசனில்

# பொலிசார் முன்னிலையில் தமிழர்களை குண்டர்கள் தாக்கினர்

### புகையிரதநிலைய அதிபர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**அனுராதபுரம் புகையிரதநிலையத்தில் ஆயுதந்தாங்கிய பொலிஸார் முன்னிலையில், குண்டர்கள், அங்கு நின்ற தமிழ்ப் பிரயாணிகளை தாக்கினார்கள். நான் பயத்தினால் அங்குள்ள கந்தோருக்குள் சென்று கதவைப்பூட்டிக்கொண்டேன். வெளியில்நின்ற எனது 10,000 ரூபா பெறுமதியான 'மொறிஸ் மைனர்' காரை காடையர்கள் கவிழ்த்துவிட்டு பொலிஸார் முன்னிலையில் தீயிட்டு கொளுத்தினார்கள்.**

சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த, அனுராதபுரம், புகையிரதநிலைய பிரதம அதிபர் திரு. ஜோன் தம்பிராசா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. தம்பிராசா மேலும் கூறியதாவது: அங்கு நான் 8 மாதகாலமாக கடமையாற்றுகிறேன். அங்குள்ள எனது பங்களாவில் குடும்பத்துடன் வாழ்ந்துவந்தேன். அனுராதபுரத்தில் காடையர்கள் தமிழர்களை தாக்குவதாகக் கேள்விப்பட்டேன்.

நான் 17ம் திகதி காலை எனது காரில் புகையிரதநிலையத்திற்கு வந்தேன். வாசலில் காரை மறித்துவிட்டு 9 மணியளவில் புகையிரதநிலையத்தில் ஒரு கூட்டத்தினர் வந்து பிளாட்பாரத்தில் நின்ற தமிழ் பிரயாணிகளை தாக்கத் தொடங்கினார்கள். நான் 'புக்கிங் ஆபீஸு'க்குள் சென்று பூட்டிக்கொண்டேன். எனது காரைத் தாக்கினார்கள். நான் வெளியில் வரவில்லை. காரை புரட்டி தீயிட்டார்கள். இதனை அங்கு கடமையாற்றிய ஆயுதம் தரித்த பொலிசார் பார்த்துக் கொண்டு நின்றனர். ரயில்நிலையத்தில் நடந்த சம்பவங்களை, சுப்பிறிண்டனுக்கு அறிவித்தேன், என் மனைவியும் பிள்ளைகளும் அங்குவந்து சேர்ந்தார்கள்.

18ம் திகதிகாலை என் பங்களா கொள்ளையடிக்கப்பட்டதாக அறிந்தேன்.

கமிஷனர்: எப்பொழுது? 17ம் திகதி இரவு. பின் யாழ்ப்பாணம் வந்தோம்.

கமிஷனர்: ரயில்நிலையத்தில் எத்தனை பொலிசார் அப்பொழுது நின்றார்கள்? ஆயுதம் தாங்கிய 3 பொலிஸார்.

கமிஷனர்: உமது பங்களாவில் யாரும் இருந்தார்களா? இல்லை.

கமிஷனர்: எல்லா சாமான்களையும் கொள்ளையடித்து சென்றுவிட்டார்களா? ஆம்.

கமிஷனர்: உமது கார் இன்சூரன்ஸ்செய்யப்பட்டதா! 3ம் பாட்டி இன்சூரன்ஸ்செய்யப்பட்டது.

கமிஷனர்: காரின் பெறுமதி என்ன? 10,000 ரூபா.

கமிஷனர்: பொருட்களின் பெறுமதி என்ன? கார் உட்பட அரை லட்சம் ரூபா.

சட்டத்தரணி: மற்ற உத்தியோகத்தர்களுக்கு இப்படி நிலைமை ஏற்பட்டதா? ஆம்.

சட்: என்ன நடந்தது? ஸ்டேசனில் ஒருவரும் பாதுகாப்பு அளிக்கவில்லை.

சட்: அங்கு கடமையாற்றுபவர்களில் பலர் தமிழர்? ஆம்.

கமிஷனர்: சிங்களவரா தமிழரா அதிகம்? தமிழர்.

**28 ஊழியர்களில் 24 பேர் தமிழர்**

கமிஷனர்: எத்தனை தமிழர்? 28 பேரில் 24 பேர் தமிழர்.

சட்; நீர் அங்கு பொலிஸ் உத்தியோகத்தரை கண்டீரா? ஆம்.

சட்: அவர்கள் ஒன்றும் செய்யவில்லை? இல்லை.

கமிஷனர்: கார் எரிவதை பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர்? ஆம்.

சட்: தாக்குதலையும் பார்த்துக்கொண்டிருந்தனர்? தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தாலும் பொலிசார் பார்த்துக்கொண்டுதானிருப்பார்கள். [க.இ]

---

மத்தியவங்கி

சிங்கள ஊழியருக்கு

# தமிழ் ஊழியர் தேவையில்லைஎன்றஉணர்வு

### ஈழவேந்தன் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

மத்தியவங்கியில் தமிழ்ஊழியர்கள் தேவையில்லை என்ற உணர்வுடனேயே சிங்களஊழியர்கள் காணப்படுகின்றனர். தமிழ் ஊழியர்களை அனுப்பினால் அந்த இடங்களுக்கு சிங்கள ஊழியர்களை நியமிக்கலாமென்ற கருத்து அவர்களிடையே நிலவிவருகிறது.

இவ்வாறு கொழும்பு மத்திய வங்கி அலுவலக உதவியாளர் திரு ம. க கனகேந்திரன் (ஈழவேந்தன்) சன்சோனி கமிஷன் முன் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினர்.

திரு. கனகேந்திரன் மேலும் கூறியதாவது:

ஆகஸ்ட் கலவரத்தின்போது நான் நுகவொடையிலிருந்தேன். நானும் மனைவியும், 2 பிள்ளைகளும், வேலைகாரப்பிள்ளையும் இருந்தோம். இக்கமிஷன் முன் சாட்சியமளிக்க விரும்பி, கடிதம் அனுப்பினேன்.

19ம் தேதி மாலை 9-20 மணிக்கு, குண்டர்கள் நுகேகொடையிலுள்ள என்வளவிற்குள் புகுந்தார்கள். அவர்களை எனக்கு அடையாளம் தெரியாது.

கமிஷனர்: வீட்டிற்குள் வந்தார்களா? வளவிற்குள் வந்தார்கள். நான் உடனே அபயக்குரல் எழுப்பினேன். அயலவர்கள் ஓடோடிவந்து எங்களை காப்பாற்றினார்கள். குண்டர்களை விரட்டியடித்தார்கள். அவர்கள் ஓடிவிட்டார்கள். 20ம் தேதி என்மனைவியையும். பிள்ளைகளையும் அயலவர்கள் தங்கள் வீட்டில் பாதுகாப்பு அளித்தார்கள். அதன்பின் பம்பலப்பிட்டியிலுள்ள எனதுஉறவினர் வீட்டுக்கு என் மனைவையயும் பிள்ளைகளையும் அனுப்பிவிட்டு, நான் இந்துக்கல்லூரி அகதிகள் முகாமிற்குச் சென்றேன்.

**அறிவுப் பொக்கிஷங்கள் தீயிடப்பட்டன**

அன்றிரவு என் வீட்டிற்கு குண்டர்கள் தீயிட்டார்கள். நான் 30 வருடங்களாக சேமித்த பல நூல்கள், அறிவுப் பொக்கிஷங்களை தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஊரடங்குசட்ட நேரத்தில், 20ம் தேதி இது நடந்ததாக அறிந்தேன்.

நெருப்பு அயலவர்களால் அணைக்கப்பட்டதால், வீடு எரியவில்லை. நூல்கள்மட்டுமே எரிந்தன. நான் அதன்பின்ஒன்றரை மாதகாலம் வீட்டுப்பக்கம் போகவில்லை. என் அயலவரான விக்கிரமசிங்காவும், மனைவியும் அங்குள்ள நிலவரங்கள் பற்றிஅடிக்கடி அறிவித்து வந்தார்.

நான் பின் வீட்டுக்குப்போய் பார்த்ததும், அது ஒரு யுத்தகளமாகஇருந்தது. புத்தகங்கள் எரிக்கப்பட்டிருந்தன. கிழித்து எறியப்பட்டிருந்தன. 30,000 ரூபா பொருட்கள், தளபாடங்கள், நகைகள் சேதமடைந்திருந்தன.

கமிஷனர்: நூல்கள் எவ்வளவு பெறுமதி? அவை பணத்தினால் மதிப்பிட முடியாத அறிவு பொக்கிஷங்கள். தறபோது கொள்ளுப்பிட்டியில் இருக்கின்றேன். எனது மனைவியும், பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள்,

மத்திய வங்கியில் 1900 சிங்கள ஊழியர்களும் 140 தமிழ் ஊழியர்களும் இருக்கின்றார்கள். அங்கு ஆட்களை பதவிக்கு எடுக்கும் பிரிவில் அன்று முதல் இன்று வரை எந்தப்பதவியிலும் ஒரு தமிழரும் இல்லை. வங்கிதொடங்கிய காலம் முதல் சாதாரண கிளார்க்கூட அப்பகுதியில் 'தமிழர் இல்லை.

கொழும்பில் இனிமேல் தமிழர்கள் வாழ்வது உயிருக்கு ஆபத்தானது. சிங்கள மக்களின் இன உணர்ச்சியை சொற்களால் விளங்கப்படுத்துவது கடினம். ஆனால் உணர்ச்சியை உணரத்தக்கதாக இருக்கிறது.

கடந்த கலவரத்தில் மட்டுமன்றி 58ம் ஆண்டு கலவரத்தில்- தாக்கப்பட்டேன். இது இரண்டாவது தாக்குதல். 58ம் ஆண்டும் அதே வீட்டில் தான் தாக்கப்பட்டேன். பட்டது போதும், இனிப்பட விரும்பவில்லை.

கமிஷனர்: என்னென்ன புத்தகங்கள் எரிக்கப்பட்டது? எல்லாத்துறையும் அடங்கியுள்ளது.

திரு. கனகேந்திரன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

என் பிள்ளைகள் கொழும்பில் நுகவொடை தமிழ் மகாவித்தியாலயத்தில் படித்தார்கள். தற்போது சண்டிக்குளியில் படிக்கின்றார்கள்.

தற்பொழுது இரட்டிப்பு செலவு எனக்கு சம்பளம் 1020 ரூபா எனக்கு. கொழும்பில் மாதம் 400 ரூபா செலவாகிறது. எனது மனைவி பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணத்தில் மற்றொரு செலவு.

மத்தியவங்கி, மாத்தளை கண்டி. யாழ்ப்பாணத்தில் கிளைகள் ஆரம்பிக்க முயற்சித்து வருகிறது. அப்படி நடந்தால் யாழ்ப்பாண கிளையில் கடமையாற்ற விரும்புகின்றேன். அது நடக்காவிட்டால், 10 வருட சேவையுடன் கூடிய பென்சனுடன் இளைப்பாற விரும்புகிறேன். அரசு நினைத்தால் இதனை செய்யலாம். சிங்களவரின் இன உணர்ச்சி என்து இலாகாவில் மட்டுமல்ல மற்றும் பலஇலாகாலும்காணக் கூடியதாகவிருக்கிறது. என் இலாகாவில் 30 அல்லது 40 தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். நுகவொடை அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியாகும்.

தற்காலிகமாகத் தான் கொழும்பில் வேலை செய்கிறேன். இடமாற்றத்தை அல்லது இளைப் பாறுவதை விரும்புகின்றேன். (க)

......

## பிரான்ஸை திருமலை வென்றது

[வவுனியா]

பிரான்சிலிருந்து இலங்கை வந்துள்ள உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், திருகோணமலை தெரிவுக்குழுவுக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட் போட்டியில் திருகோண மலை உதைபந்தாட்டக் கோஷ்டியினர் 1—0 கோலால் வெற்றியீட்டினர்.

---

## "பெற்றோர் கவனமெடுக்காத பாடசாலை முன்னேறாது"

[யாழ்ப்பாணம்]

"ஒரு பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பாடசாலையில் பயிலும் பிள்ளைகளினதும் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் பங்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. பெற்றோர் கவனமெடுக்காத பாடசாலைகள் முன்னேற்றமடைய முடியாது"

இவ்வாறு காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் திரு. இ. சிவமணி மேற்படி பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. இ. சிவமணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கும்படியும் பாடசாலையின் தற்காலிக மண்டபத்தை நிரந்தர மண்டபமாக மாற்றி அமைக்கும் படியும் விளையாட்டு மைதானம் ஒன்றை நிறுவித் தரும் படியும் வடமாநில வித்தியாதிபதியையும் வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினரையும் கோரும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் பாடசாலையின் வளர்ச்சி பற்றி பிரம்மஸ்ரீ சி. சிவசுப்பிரமணியக் குருக்கள், திரு. அ. பொ. கோபால் ஆகியோர் எடுத்துரைத்தார்கள்.

கூட்ட முடிவில் பின்வருவோரைக் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டது.

தலைவர்: அதிபர் திரு. சி. சிவமணி, உபதலைவர் திரு. ச. சதாசிவம், செயலாளர்: திரு. வி. கனகேந்திரம், உபசெயலாளர்: ஸ்ரீ சி. சிவசுப்பிரமணியக்குருக்கள், பொருளாளர்: திரு. ச. நாகராசா, நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் ச பொ கோபால், கா நாகலிங்கம், இ வைத்திலிங்கம், மு. அருமத்துரை, க அருளம்பலம், அ நாகராசா, திருமதிகள் க சுந்தரம், சி கந்தசாமி, திரு வே மதியாபரணம், திரு க. ஆறுமுகம். [கி-அ]

## வவனியாவில் இன்று நடக்கும் கண்காட்சி

(வவனியா)

வவனியாவில் கால்நடை வளர்ப்பாளர் கழகத்தின் ஆதரவில் இன்று வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் உயர் ரக கால்நடை செயற்கைமுறை பெருக்கக் கண்காட்சியும், பயிற்சி விழாவும் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி க பாலச்சந்திரனும்,விசேஷ விருந்தினர்களாக கலாநிதி ஏ.எஸ் அபயரத்னவும், கலாநிதி வி. ஆரியகுமாரும் கலந்துகொள்கிறார்கள்.

விழா முடிவில் "செயற்கை முறைச் சினைப்படுத்தல்" என்னும் பொருள்பற்றிய வில்லுப்பாட்டும், கால்நடை வளர்ப்புப்பற்றிய படக்காட்சியும் இடம்பெறுகிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கால்நடை வளர்ப்பாளர்கழகச் செயலாளர் திரு எஸ் என். ஜீ. நாதன் மேற்கொண்டுள்ளார். [அ]

.....

## கல்விப்பகுதி சுற்றுநிருபம்

[அரியாலை]

கல்லூரிகளில் பெற்றோர், ஆசிரியர் சங்கங்கள் அமைப்பது பற்றியும், அச்சங்கங்கள் செயல்படும் முறைகள் பற்றி கல்வி அமைச்சின் செயலாளரும் கல்விப் பணிப்பாளருமான திரு டி எம் பி பி தசநாயக்கா எல்லாப் பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் சுற்றுநிருபமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் பாடசாலையின் வெளி முயற்சிகளில் பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பு வேண்டுமென்றும், பாடசாலைகளின் தேவைகளைத் திருப்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், கல்வி சம்பந்தமான அரசாங்கக் கொள்கையைச் செயற்படுத்த உதவி புரியவேண்டுமென்றும், மாணவரின் கல்வி தொடர்பான குறைபாடுகளையும், பிரச்னைகளையும் ஆராய்ந்து அவற்றைச் சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும், பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பூரண ஆயுதக்குறைப்பு சிட்னி மகாநாட்டில்

## ஜே. ஆர். வலியுறுத்து

சிட்னி, பெப். 14

ஆயுதக்குறைப்பைபூமு அளவில் கைக்கொள்ளவேண்டியதின் அவசியத்தை இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று வலியுறுத்தினார்.

சிட்னியில் நடைபெறும் காமன்வெல்த் தலைவர்கள்மகாநாட்டில் உரை நிகழ்த்துகையிலேயே திரு. ஜெயவர்த்தன இக்கருத்தை வலியுறுத்தினார்.

வல்லரசுநாடுகள்தனிப்பட்ட முறையிலோ கூட்டாகவோ வானவெளியை ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடாது என்றும் அவர் கூறினார்.

அமைதி-சமாதானம், அபிவிருத்தி ஆகிய இரண்டு அம்சங்களையே அவர் தமது பேச்சின் முக்கிய அம்சங்களாகப் பயன்படுத்தினார்.

உலக மகா யுத்தத்திற்குப் பிறகு நாடுகளுக்கிடையில் நூற்றுக்கணக்கான எல்லைப் பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. இவைகளில் வல்லரசுகளும் தலையிட்டுவந்துள்ளன இவைகளில் வியட்னும் தகராறு, ஆஸியா மைனர் ஆகியவற்றையும் தற்பொழுது நடைபெறும் எதியோப்பியா — சோமாலியா தகராறுகளையும் குறிப்பிடலாமென்றார் திரு. ஜெயவர்த்தன.

ஆயுதஉற்பத்திக்காக வல்லரசுகள் பெருமளவில் பணத்தைப் பயன்படுத்துகின்றன. இது அமைதிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றார்.

உலகில் பல நாடுகளிலும் கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடுகிறார்கள். இலங்கையில் 50 தொடக்கம் 60 விதமானவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். 12 லட்சம்பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உலகம் முழுவதும் இப்படியான பிரச்னைகள் இருக்கின்றன.

இம்மாதிரிப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் கொழும்புத் திட்டம் பெரிதும் உதவியுள்ளது. ஆஸ்திரேலியா' கனடா போன்ற நாடுகள் இத்திட்டத்துக்கு பெருமளவில் நிதியுதவியளித்துள்ளன என்றார்.

......

## தட்டுப்பாடு

[பூநகரி]

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பெற்ரோல் நிலையத்தில் மண்ணெண்ணை, டீசல், பெற்ரோல் தட்டுப்பாடுள்ளதன் காரணமாக விவசாயிகள் மிகவும் கவலைப்படுகின்றனர். [உ]

—

## புதிய அதிபர்

(வவனியா)

வவனியா மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக கொழும்புரேயல் கனிஷ்ட கல்லூரியில்கடமையாற்றிய திரு. வீ. சிவஞானம் இடமாற்றம் பெற்றுள்ளார். [இ]

—

## படுகாயம்

[கரணவாய்]

கார் ஒன்றும் சைக்கிள் ஒன்றும் மோதியதில் சைக்கிளில் பயணம்செய்த ஒரு சிறுவனும் சிறுமியும் படுகாயத்திற்குள்ளாகினர்.

இச்சம்பவம் கரணவாய் வடக்கு சாண்டார்சந்தை என்னுமிடத்தில் நடந்தது.

சிறுவனும் சிறுமியும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்துசம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிசார் விசாரணை செய்துவருவதுடன் சம்பந்தப்பட்டகாரையும் தடுத்து வைத்துள்ளனர். [உ]

# உழைப்பால் உயர்ந்த உத்தமர் குலசிங்கம்

— ந. சபாரத்தினம் —

உறுதியும் துணிவும் உள்ளவர்கள் தாம் சுதந்திரமாக வாழ்கின்றனர், வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். கோழைகளோ என்றும்அடிமைகளாய் வாழ்கின்றனர். அறிவும் ஆற்றலும் உடையவர் ஆற்றமுடியாத செயலுண்டா?

அமரர் அத்வகாத் குலசிங்கம் அத்தகைய அபூர்வமனிதர் தாம். அவர் தொட்டதைத் துலங்கவைத்தார். எடுத்ததைச் செய்துமுடித்தார். அவரைச் சாதாரண மனிதன் என்று நினைத்தவர்கள் வியக்கும்படி மின்னல் வேகத்தில் செயல்புரிந்தார். உயர்ந்தார்.

காரைநகரில் சட்டக்கலையில் பிரபலமடைந்த குடும்பத்தில் பிறந்தவர் அமரர் குலசிங்கம் ஆயினும்செல்வவாழ்க்கையோ வசதிக்கேற்ற கல்வியோ அவருக்குக் கிட்டவில்லை. உழைப்பால் உயர்ந்தவர் குலசிங்கப் பெரியார் மகாத்மாகாந்தியின் சத்தியசோதனைபோல் அமைகின்றது, அவருடையவாழ்க்கை நயவரலாறு. பலதுறைகளில் தம்மைப் பரிசோதனை செய்த பெரியார் நாட்டின் தலைசிறந்த சட்ட நிபுணராகத்திகழ்ந்தார். சட்டத்துறையை எட்டிப் பிடித்து உயர்ந்த வரலாறு அமெரிக்காவின் ஆபிரகாம் லிங்கனை நினைவூட்டுகின்றது.

நான் சிறுமாணவனாகஇருந்த போது அவர் ஒரு சங்கீத வித்வன்னர், மிருதங்க மன்னர் என்று நினைத்திருந்தேன். நான் கல்லூரியில் படித்தபோது, அவர் ஒரு சிறந்த ஆசிரியர் என்ற புகழ் எங்கும் பரவியது. நான் வாலிபனாக உயர்கல்வி கற்றபோது, அவர் திறமை மிகுந்த பத்திரிகாசிரியர் என்று பாராட்டப்பட்டது என் நினைவுக்கு வருகின்றது. பத்திரிகா தர்மத்தை பாதுகாக்க, பிரபல தினசரியான சிலோன் டெயிலி நியூஸ் ஆசிரியப் பதவியைத் துறந்தார்.

சட்டப்படிப்பும் அதைத் தொடர்ந்து, பிறக்டராகவும் நொத்தாரிசாகவும் புகழ் பெற்ற காலையில், தமது ஆற்றலுக்கு அத்தியாவசியமான தொழில் அத்வகாத் என்பதை உணர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேஉயர்நீதிமன்ற வழக்குரைஞராக உயர்ந்தார்.

சட்டத்துறையில் அப்பெரியார் ஆற்றிய சாதனைகள் புராணக் கதைபோல் தோன்றும். ஊர்காவற்றுறை தொகுதியில் பாராளுமன்றத்துக்கு போட்டியிட்டவர், தோல்வியடைந்த போது, தேர்தல் ஆட்சேபனை வழக்கில் கொழும்பு பிரபல அத்வகாத் எச் வி பெரேராவைத் தோற்கடித்து நாட்டின் சட்ட உலகைத் திகிலடையச் செய்த சட்டச் செம்மல்அமரர் குலசிங்கம்.

கோட்டில் பெரும்பொருள் ஈட்டிய பெரியார். அதை வீட்டில் வைத்துப் பெருக்கவில்லை. கிளிநொச்சிக்காட்டில் விதைத்தார். பித்தன் என்று உலகவர் சூட்டிய பட்டத்தையும் அவர் பொருட்படுத்தவில்லை. கிளிநொச்சிக்காடு இன்று நாடாக நகரமாக மிளிர்வது பெரியாரின் தியாகசிந்தையையும் தீர்க்க தரிசனத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

'பழுதுண்டுவேறோர்பணிக்கு' என்ற வாக்கியத்தின் உண்மை அவர் வாழ்க்கையில் வேரூன்றி இருந்தது. சுதந்திரநாடு தனது உணவுக்கு பிறநாடுகளில் தங்கியிருத்தலைக் கண்டித்துப்பேசி, எழுதி, பயன் காணக் கட்டத்தில் உழுதுண்டு வாழ்ந்துகாட்டினார்; தமக்காகவில்லை தமது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல; நாட்டு மக்கள் அனைவருக்குமே! தொண்டர்களுக்கு நாடுதான் வீடு, நாட்டு மக்கள் தாம் உற்றார் உறவினர். இல்லறத்தை நல்லறமாக நடாத்திய குலசிங்கப் பெரியார், சிந்தனையிலும் செயலிலும் நாட்டு மக்களை நினைவிற்கொண்டு பரந்த பொதுத் தொண்டிலே ஈடுபட்டார்.

'சொல்வல்லன், சோர்விலன் அஞ்சான் அவனை இகல வல்லல் யார்க்கும் அரிது' என்ற தமிழ் முனிவரின் இலக்கணத்திற்கு இலக்கியமானது அமரரின் வாழ்க்கை.

விடாமுயற்சி வெற்றிதரும் மற்றவர் தயவை அண்டிவாழ விரும்பும் இன்றைய இளைஞர்களுக்கும் இனிவரவிருக்கும் சந்ததியினருக்கும் பெரியாரின் வாழ்க்கை பயனளிக்கும் அரிய நூலாகக் காட்சியளிக்கின்றது.

சிந்தனை, சொல், செயல் ஒருங்கே சேர்ந்த பாங்கில். பேச்சிலும், எழுத்திலும் செயற்றிறனிலும் சிங்கம் போல் வாழ்ந்த மாமனிதன், அமைதியும் அடக்கமும் நிறைந்த சாதாரண விவசாயிபோல் மக்கள் மத்தியில் வாழ்ந்ததே அவர் புகழின் உச்சநிலை,

குலசிங்கம்இறந்தார்! ஆனால் அவர் புகழ் இறக்கவில்லை. மனிதமலையை - மக்கள் தலைவரை, உழைப்பால் உயர்ந்த உத்தமரை யாரால் மறக்கமுடியும்

-ந. சபாரத்தினம்

# "கான்ஸ்டபிள், நெஞ்சில் காலால் உதைத்தார்"

[யாழ்ப்பாணம்]

காணிவல் வாசலில் எங்களை என்ன செய்யப்பார்த்தீர் என்று பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காலால் என் நெஞ்சில் உதைத்தார். மக்கள் பொங்கி எழுந்தனர். 'ஒன்றும் செய்யாதீர்கள்' என அவர்களை தடுத்துநிறுத்தினேன்'

சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்து யாழ் மாநகர பலநோக்கு கூ. சங்க மேற்பார்வையாளர் திரு. வைத்திலிங்கம் குணநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

குணநாயகம் மேலும் கூறியதாவது: சென் பற்றிக் காணிவல் நடந்தது. ப. நோ. கூ. சங்கம் அங்கு ஒரு கடைபோட்டிருந்தது. 12ம் தேதி இரவு காணிவல் வாசலில் நான் பொறுப்பாளராக நின்றேன். மாலை 6-30 மணிக்கு சிலர் சிவில்உடையில் வந்து டிக்கட் இல்லாமல் உள்ளே போக விடுமாறு கேட்டார்கள். அவர்களில் 4 அல்லது 5 பேர் இருக்கும். சிங்களத்தில் கதைத்தார்கள். எனக்கும் சிங்களப் பேச்சுத் தெரியும். டிக்கட் எடுக்காமல் உள்ளே செல்ல விடமாட்டேன் எனக் கூறினேன்.

### என்னை ஏசினார்கள்

பெரியவர்களுக்கு 2 ரூபா டிக்கட்; சிறுவர்களுக்கான 1 ரூபா டிக்கட்டையாவது எடுத்துச்செல்லுமாறு கூறினேன். அவர்கள் என்னை ஏசினார்கள்.

'உன்னுக்கு வாரும் கவனித்துக்கொள்ளுகிறோம் எனக் கூறிவிட்டுச் சென்றார்கள். தாங்கள் பொலிஸ்காரர் என்றும் எனக்குச் சொன்னார்கள். டிக்கட் வாங்கிக்கொண்டு போனார்கள்.

### நெஞ்சில் உதைத்தார்

நான் சாப்பிடப்போக ஒரு மணியளவில் அவர்கள் வந்து பெயர் என்ன என்று கேட்டார்கள். நான் பெயரைச் சொன்னேன். ஒருவர் நெஞ்சில் காலால் உதைத்தார். பின் மக்கள் கூடவே, போய் விட்டார்கள். ஒருவரையும் டிக்கட் இல்லாமல்விட அதிகாரம் இல்லையென்று அவர்களிடம் கூறினேன்.

போகும்போது ஒருவர், இன்று உனக்குமட்டுமல்ல, நாளைக்கு மிச்சத்தை பார்த்துக்கொள்ளுகிறோம் என்று கூறிவிட்டு போனார். நான் நடந்த சம்பவம்பற்றி காணிவல் பொறுப்பாளரான டாக்டர் பிலிப்பிற்கு கூறினேன். நான் அடுத்தநாள் காணிவல் போகவில்லை.

### டயர்கள் எரித்தார்கள்

16ம் திகதி காலை 9 மணிக்கு சி. எஸ். கே. சந்தியில் கொஞ்சப்பேர் நின்று டயர்களைப் போட்டு எரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது பொலிஸ் டிரக் வந்தது. மேலே சுட்டுக்கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## வை. எம். சி. ஏ. விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம் வை எம். சி. ஏ விளையாட்டுவிழா அடுத்தாதம் 1-ம் திகதி தொடங்கவுள்ளது. 18ம்திகதி வரை இவ்விழா நடைபெறவிருக்கிறது.

இவ் விளையாட்டுவிழாவில் பட்மின்டன், டேபிள் டெனிஸ், கரம், செஸ் ஆகிய போட்டிகளும் இன்னும் வேறுவகையான போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன.

கல்லூரிகளில் கற்கும் மாணவ மாணவிகளுக்கும் ஏனைய ஆண், பெண் இருபாலாருக்கும் போட்டிகள் தனித்தனிப் பிரிவாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [அ]


## தேவை

விவசாய சம்பந்தமாக விவசாயிகளை நேரடியாக தொடர்பு கொண்டு பிரசாரம், அறிவூட்டல் செய்வதற்கு விவசாயப் பட்டதாரிகள் அல்லது விவசாய டிப்ளோமா தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி 21-02-78**

விளம்பர இலக்கம்-10, மே/பா ஈழநாடு,
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

# அம்புஷ் 25

வெங்காயம்-மிளகாய்

பயிர்களை தாக்கும் புளுக்களை

கட்டுப்படுத்த வல்ல

சக்திவாய்ந்த கிருமிநாசினியாகும்.

4000 கன்றுகளுக்கு போதுமான

2 அவுன்ஸ் (50ML) அம்புஷ்

கிருமிநாசினியின் விலை:
ரூபா 35-40 சதம் மட்டுமே:

மேலதிக விபரங்கட்கு:

த ரோறு லிமிட்டெட்,

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7651



## மத்திய கிழக்கு அமைதிமுயற்சி

# வெற்றிபெற எகிப்திய அதிபருக்கு பாப்பரசர் ஆசி

வத்திக்கான், பெப். 14

**மத்திய கிழக்கு அமைதி குறித்து எகிப்திய அதிபர் அன்வர் சதாத் எடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் பூரண வெற்றி கிடைக்க வேண்டும் என்று பரிசுத்த பாப்பரசர் போல் ஆசி கூறினர்.**

தம்மை நேரில் சந்தித்து மத்திய கிழக்கு விவகாரம் குறித்தும் விவகாரத்திற்குத் தீர்வு காணும் பொருட்டும் தாம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்தும் ஜனுப் சதாத் பேச்சுநடத்தியபின்னரேபாப்பரசர் ஜனுப் சதாத்துக்கு ஆசி கூறினர்.

முஸ்லிம் தலைவர் ஒருவருக்கு பாப்பரசர் ஆசி கூறியுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

இதேவேளையில் ஜனுப்சதாத் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று தமக்கு பூரணநம்பிக்கை இருப்பதாக இஸ்ரேல் எதிர்க் கட்சித்தலைவர் திரு. பெரஸ், ஜனுப் சதாத்திடம் நேரில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலும், ஏழு ஐரோப்பிய நாடுகளிலும் விஜயம் ஒன்றை மேற்கொண்ட அதிபர் ஜனுப் சதாத், இப்போது எகிப்து திரும்பியுள்ளார்.

நாடு திரும்பும் வழியிலேயே திரு. பெரஸை சதாத் சந்தித்தார். [இ]

## அகதியாக வந்து கிணற்றிற்குபலியான சிறுமி

### ஏழாலையில் பரிதாப சம்பவம்

(மாவிட்டபுரம்)

இருள் சூழும் நேரம் கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற வேலைக்காரச் சிறுமி ஒருத்தி கிணற்றினுள் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக மாண்டார்.

கண்டியைச் சேர்ந்த பெரியமலை ஜானகி என்னும் 13 வயதுச் சிறுமியே இவ்வாறு மரணமானவளாவாள்.

இம் மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு க. பரமநாதன் விசாரணை நடத்தியசமய ஆகஸ்ட் கலவரத்தின்போது தமது பெற்றோருடன் அகதியாக வந்து கைதடி முகாமில் தங்கியிருந்த இச் சிறுமி பின்னர் ஏழாலையிலுள்ள வீடொன்றில் வேலைக்குச் சேர்ந்தாரென்றும் சம்பவதினம் பொழுதுபடும் நேரத்தில் ஏனைய அலுவல்களை முடித்துவிட்டு தண்ணீர் அள்ள கிணற்றடிக்குச் சென்றபோது தவறிவீழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

விபத்து மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். [உ]

......

## இஸ்ரேலிய சிறையில் சைப்பிரஸ் பத்திரிகையாளர்

டெல்அவிவ், பெப். 14

பத்திரிகையாளர்களை, குறிப்பாக அகற்றப்பட்ட அரபு பிரதேசங்களின் நிலவரம் பற்றி மேற்கத்தைய பத்திரிகைகளுக்கு செய்திகளை அனுப்பும் நிருபர்களைச் 'சுற்றி வளைப்பதில்' இஸ்ரேலிய அரசாங்கம் தீவிரம் காட்டி வருகின்றதாம்.

'உளவாளிகள்' என்ற சந்தேகத்தின்பேரில் அண்மையில் கைதுசெய்யப்பட்ட இரு சைப்பிரஸ் பத்திரிகையாளர்களான

(7-ம் பக்கம் பார்க்க)

## இந்திரா மீண்டும் பதவி ஏற்றால்

# பேச்சு சுதந்திரம் பறிபோகுமாம்!

### -கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, பெப். 14

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வந்தால் பேச்சுச் சுதந்திரம் பறிபோகும்.

இவ்வாறு தி. மு. க. தலைவரும் தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி கூறினர்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினர்.

திருமதி காந்தி மீண்டும் பதவிக்கு வந்தால் சர்வாதிகாரம் மீண்டும் தலைதூக்குவதுடன் மனித உரிமைகளும் ஒடுக்கப்படும் என்றும் திரு. கருணாநிதி கூறினர். [இ]

## 5 தமிழ்ப் படங்களுக்கு தலா ரூ. 1 லட்சம் பரிசு கிடைக்கும்

சென்னை, பெப். 14

சிறந்த தரமுள்ள ஐந்து தென்னிந்திய தமிழ்ப்படங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பரிசளிக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

வருடாந்தம் இப்பரிசுத் தொகை வழங்கப்படும். [இ]

## 13ம் நூற்றண்டின் வான சாஸ்திரம்

மாஸ்கோ, பெப். 14

தாஜிகிஸ்தானைச் சேர்ந்த புராதன நகரமாகிய ஹா-தியுபெயில், 13ம் நூற்றண்டைச் சேர்ந்த அரிய கையெழுத்துப் பிரதி ஒன்றை சோவியத் நிபுணர்கள்கண்டெடுத்துள்ளனர். அது உபைதுல்லா அஷ்-ஷரியா என்றமத்தியகால விஞ்ஞானிக்குச் சொந்தமானது. "விண்வெளி மண்டலத்தில் துல்லியமான நிர்ணயம்" என்பது இதன் தலைப்பு.

முதன்முறையாக நட்சத்திரங்களின் வரைபடம் வரைந்து சூரியன் மற்றும் அதைச் சுற்றும் கிரகங்களைக் கொண்ட மண்டலத்தில் பூமியின் நிலையை நிர்ணயிக்க முயன்றிருக்கிறார் அந்த விஞ்ஞானி. அந்தக் காலத்தில் கீழ்த்திசை நாடுகளில் வானசாஸ்திர வளர்ச்சியை இந்த நூல் விளக்குகிறது. [இ]

## 3 நாட்கள் கப்பல்சேவை

இராமேஸ்வரம், பெப். 14

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னருக்குமிடையே திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் கப்பல் சேவை இருக்கும்.

## 200 மாணவர் உண்ணு விரதம்

சென்னை, பெப். 14

12 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை ஆட்சேபித்து சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த 200 மாணவர்கள் நேற்று உண்ணுவிரதம்ஆரம்பித்தனர்! பல்லவன் போக்குவரத்து பஸ் எரிக்கப்பட்டது சம்பந்தமாக இம்மாணவர்கள் மீது வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. [க]

## இந்திரா மீதான ஊழல் விசாரணைகள் ஓரளவு முற்றுப் பெற்றுள்ளன

### விரைவில் நடவடிக்கை என்கிறர் சரண்சிங்

அமராவதி, பெப். 14

"முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும், அவரதுசகமந்திரிகள் அதிகாரிகளுக்கும் எதிரான ஊழல்குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணை ஓரளவு பூர்த்தியாகிவிட்டது. விரைவில் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் கூறினர்.

அமராவதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம்ஒன்றில் பேசுகையிலேயே அவர்

(7-ம் பக்கம் பார்க்க)

வெளிவருகின்றது

பாலபோதினி

அரிவரிப்புத்தகம்

அடுத்த மறு பதிப்பு அச்சாகிக்கொண்டிருக்கிறது. விரைவில் வெளிவருகிறது.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

## சரண்சிங் கூட்டத்திற்கு செருப்புவீச்சு!

அமராவதி, பெப். 14

அமராவதியில் திரு. சரண்சிங் கலந்து கொண்ட கூட்டத்தில் திருமதி இந்திரா காந்திக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பிய ஒரு குழுவினர், மேடையை நோக்கி கற்களையும், செருப்புக்களையும் வீசினராம்.

திரு சரண்சிங்பேசுவதற்கு எழுந்தபோதே கற்களும், செருப்புக்களும் மேடையை நோக்கி வீசப்பட்டதாகவும் அக்கூட்டத்தினரை பொலிசார் துரத்தியடித்த பின்னர் திரு. சரண்சிங் தொடர்ந்து உரையாற்றியதாகவும் பொலிசார் தெரிவித்தனர். [இ]

இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்:
உறவுஸ் அண்ட் புறொபர்ட்டி ட்றேட்ஸ் லிமிட்டெட்

RAVI

# மாணவரிடை ஒழுக்கத்தை வளர்ப்பது ஆசிரியர்பொறுப்பு

[மாவிட்டபுரம்]

''மாணவர்கள்தான் இந்த நாட்டின் எதிர்காலச்சிற்பிகள். ஆகவே அவர்களை, சமுதாய ஊழல்களைக் களைந்தெறிந்து சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் புரட்சியாளர்களாக வளர்த்தெடுக்க வேண்டியது பாடசாலைகளின் பொறுப்பாகும். பாடசாலைகள் இப்பொறுப்பை நிறைவேற்றினால் தான் இந்தநாட்டில் எதிர்கால சமுதாயம் சிறந்துவிளங்கமுடியும்''

இவ்வாறு தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை புதியகட்டிடத் திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்வியதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் கூறினர்.

வித்தியாசாலை அதிபர் திரு. இராஜரத்தினம் தலைமையில் நடந்த இவ்விழாவில் பிரமஸ்ரீ வ. குசேர்மாவின் வரவேற்புரையை அடுத்து கல்வியதிபதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

''ஒழுக்கம் கட்டுப்பாடுள்ள மாணவர்களால்தான் சிறந்த இலட்சியங்களின் அடிப்படையில் செயல்படமுடியுமாதலால் அப்படியான மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியர்கள் கவனமெடுக்கவேண்டும். பாடசாலைகள் கல்வி புகட்டும் நிலையங்களாக மட்டும் இராது மாணவர்களை நாட்டுக்கேற்ற நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டும்'' என்றுர்.

மங்கள விளக்கேற்றி புதிய கட்டிடத்தை திறந்துவைத்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், ''பாடசாலைகளில் கட்டிடம் போட்டுவிட்டுவிட்டால் மட்டும் போதாது; பாடசாலைகள் கல்வியில் முன்னேறவேண்டும். இதுபோன்ற சைவப்பிரகாச வித்தியாசாலைகள் சைவமும் தமிழும் தழைக்கப்பாடுபடல் வேண்டும். ஆசிரியர்கள் இதை உணர்ந்துசெயல்படவேண்டும். வெறும் கல்வியுடன் மட்டும் நிற்காது தனது இனத்தின் வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு செயல்படக்கூடிய மாணவர்கள் உருவாகவேண்டும். அவர்கள் நமதுஇனத்தின் பாதுகாவலர்களாக மிளிர வேண்டும்'' என்றுர்.

மற்றும் வட்டாரக்கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் உட்படப் பலர் பேசினர்.

பிரமஸ்ரீ சுந்தரமூர்த்திஐயர் நன்றிகூறினர். [உ]

## நவரச நாடகம் 250-வது மேடை

[யாழ்ப்பாணம்]

விஜயேந்திரனின் நவரச நாடகம் 250-வது மேடையாக இபரியவிளான் ஞேமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. [இ]

## அங்குரார்ப்பணம்

[சரணவாய்]

யாழ். மாவட்டக் கட்டிடத் திணைக்கள ஊழியர்களால் ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய ஊழியர் சங்கத்தின் கிளையொன்று அண்மையில்அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இக்கிளையின் தலைவராக திரு. எம்.சிவஞானமும், செயலாளராக திரு. செ. சண்முகநாதனும், தனதிகாரியாக திரு ஐ. தருமராசாவும் தெரிவாகினர்.

## புயல் பாதித்த கட்டிடம்

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களின் முன்பு வீசிய திடீர் புயலினுல் பலத்த சேதத்திற்குள்ளாகிய வேலணை உதவி அரசாங்க அதிபரின் விடுதி இதுவரை திருத்தப்படாமல் பாதிக்கப்பட்டநிலையில் காணப்படுகிறது. இவ்விடுதியின் ஒரு பகுதி பிரதேச அபிவிருத்திச் சபையின் அலுவலகமாகப் பாவிக்கப்பட்டுவந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ)

## இஸ்ரேலிய..

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பஞெயர்டில் பாஷேல்ஸ் ஹான்ஸ் லெபிறெசீற் ஆகியோர் தொடர்ந்தும் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாலஸ்தீன ஸ்தாபனங்களிடம் கையளிப்பதற்கென கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்களை இவர்கள் படம் எடுத்தார்கள் என்பதே இவர்களுக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டாகும். இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றது எனவும், இந்த இரு பத்திரிகையாளர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் இவர்களது வழக்கறிஞர் ஃபெலிஸியா லாங்கர் விடுத்த வேண்டுகோளை இஸ்ரேலிய அரசு நிராகரித்துள்ளது. [இ]

## ஊழல்...

[6-ம் பக்கத்தொடர்ச்சி[

மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''கடந்த 30 ஆண்டு காலத்தில் தீட்டப்பட்ட தவருன பொருளாதாரத் திட்டங்களினுல் இந்திய பொருளாதாரம் சீர்கெட்ட நிலையில் உள்ளது. இந்தச் சீர்கேட்டை ஜனதா அரசு நிச்சயம் சீர்செய்யும்.

திருமதி இந்திராவின் ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்கள் பொதுஊழியர்களாகப் பணிபுரியாமல் எஜமானர்களாகவே நடந்துவந்தனர். இதனுலேயே மக்கள் அவர்கள் மீது வெறுப்புக்கொண்டனர்.'' (இ)

(திருகோணமலை)

திருகோணமலை நகரத்திற் கண்மையிலுள்ள அபயபுரம் என்னும் இடத்தில் வெளிநாட்டுக் குடிவகைகள் விற்கும் கடையொன்றினை இரவோடிரவாக உடைத்து மதுபானங்கள் திருடப்பட்டுள்ளன.

சுமார் ரூபா 10,000/-பெறுமதியான குடிவகைகள் களவாடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. அதுசம்பந்தமாக பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை. (உ)



## திருப்பணித் தவமணி

சைவத்தையும் தமிழையும் தன்னிரு கண்மணிகள் எனப் போற்றிவந்த பெரியார் அமரர் சபாபதிப்பிள்ளை இவ்வுலகில் தற்போது இல்லை! ஆமாம், அன்னரது பூதவுடம்புதான் இல்லை; புகழுடம்பு சைவஉலகு உள்ளமட்டும் நிலைபெற்றிருப்பது திண்ணம்.

நல்லை. ஞானசம்பந்தர் ஆதினத்தை நாம் சிந்திக்கின்றபோது அங்கே திருத்தொண்டர், அருளாளர், திருப்பணித் தவமணி காரணவாய் வே.சபாபதிப்பிள்ளையும் எங்களது இதயத்தில் இருந்து என்றும் நீங்கமாட்டார்.

அன்னர் அமரராகி இன்றுடன் ஒரு மாதமாகின்றது. ஒரு மாதமல்ல, ஒருவருடமல்ல, சைவத்தமிழுலகுள்ளவரை, அன்னரது தெய்வீகப் பணிகள் நிலைபெற்றிருப்பது திண்ணம்.

அன்னரை நினைவுகூருமுகமாக நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்தில் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய ஸ்வாமிகளது அருளாணையின் வண்ணம் ஆதீன இளவரசு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் தலைமையில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்கூட்டம் ஒன்று இன்றுமாலை நடைபெறவுள்ளது.

இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் மாந்திரீக பூஷணம் சிவஸ்ரீ சாம்பசிவக்குருக்கள், சைவப்புலவர் சிவமணி திரு வே. கந்தசாமி, திரு. எஸ். சத்தியமூர்த்தி, திரு ஆ. துரைராசசிங்கம், பண்டிதர் இ. க. முருகேசு உட்படப் பலர் இரங்கல் உரை நிகழ்த்துவர். ஆதீன ஓதுவார்மூர்த்தி திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசையும் இடம்பெறும். (இ)


சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினியின்
மோட்டார் சுந்தரம்பிள்ளை
சிறுவர்களுக்கான ஆங்கிலப்படம்!
18-2-78, 19-2-78 சனி, ஞாயிறு காலை 8-30மணிக்குமட்டும்
"Kingdom in the Clouds"

றீகல் (யாழ். நகர்)
புதிய வெளியீடு!
அசோக்குமார் — மீனுகுமாரி நடித்த
தினசரி 2-30, 6-30 இரவு 9-45
பக்கீஷா - PAKEEZAH
ஹிந்தி (கலர்-சினிமாஸ்கோப்) சங்கீதம்: நௌசாத்
[இந்திய திரைப்பட விழாவில் பரிசுபெற்ற படம்]

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்-வைஜெயந்திமாலா நடித்த
தேன்நிலவு

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா.
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
17-ந் திகதி முதல்
சித்தி (புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்) 2-வது வெற்றி மாதம்
வி. பி. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஹெனீட்டா நடித்த
தினசரி 4 காட்சிகள்
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ராஜா [யாழ்ப்பாணம்[ தினசரி: 10-30, --30-6-30, 9-30
ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சோ
விஜயகுமார் மனோகர் நடித்த
அசோகா பிரதர்ஸ் அளிக்கும்
அபிராமி மூவீஸ்



வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
ஜெமினி - சரோஜாதேவி
பனித்திரை

RIO Daily 4 Shows
(Jaffna) Last Few Days
HIGH VELOCITY

நாகமஸ் [சுன்னுகம்]
தினசரி: 6-45, 10-0
சிவாஜி - வாணிஸ்ரீ
சிவகாமியின செல்வன்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-45.
நினைத்ததை முடிப்பவன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா
கணவன்

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ (யாழ் நகர்) போன் 7693
முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்

# "தலையில் அடித்தனர்; தாலிக் கொடியைப் பறித்தனர்!"

## 'பொத்துகர' சம்பவம் பற்றி ஆசிரியர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

''கொழும்பிலிருந்து நானும் எனது மனைவியும், பிள்ளையும் ரயிலில் வந்துகொண்டிருந்த போது பொத்துகரவுக்குச் சமீபத்தில் 50 பேர் கொண்ட குண்டர் கோஷ்டியொன்று ரயிலை மறித்து கொள்ளையடித்தது. 9000 ரூபா பெறுமதியான என் மனைவியின் தாலியும், சங்கிலியும், சூட்கேசும் கொள்ளையடிக்கப்பட்டது.''

சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆசிரியரான என். ஆனந்தராசா மேற்கண்டவாறு கூறினார்

### கத்தி பொல்லுடன் வந்தார்கள்

கண்டி தமிழ் மகாவித்தியாலய ஆசிரியரான என். ஆனந்தராசா மேலும் கூறியதாவது:- ''ஆகஸ்ட் 17ம் தேதி கொழும்பிலிருந்து ரயிலில் வந்துகொண்டிருந்தோம், பொத்துகர ரயில் நிலையத்தில், 2 மைலுக்குச் சமீபத்தில் ரயில் நிறுத்தப்பட்டது. கத்தி, பொல்லுடன் 50 குண்டர்கள் ரயிலில் ஏறி கொள்ளையடித்தனர். பிரயாணிகள், ரயிலிலிருந்து இறங்கி ஓடினார்கள். பலர் தாக்கப்பட்டனர். நாங்களும் இறங்கி ஓடினோம். பின் கொள்ளையர்கள் சென்றபின் வந்து ரயிலில் ஏறி குருணாகலை வந்தடைந்தோம். எனக்கும் தலையில் பொல்லால் அடித்தார்கள். குருணாகலில் இருந்து கண்டிக்கு வந்தோம். கண்டியில் வீட்டிற்குப் போனேன். அங்கிருந்து முஸ்லிம் வீடொன்றில் தஞ்சமடைந்தோம்.

''20ம் தேதி காலை கண்டி அகதிகள் முகாமிற்குச் சென்றோம். அங்கு நான்கு நாட்கள் இருந்தோம். விசேட பஸ்ஸில் பின் யாழ்ப்பாணம் வந்தோம்.

அதன்பின் நான் கண்டிக்குப் போகவில்லை.

கமிஷனர்: உடுத்த உடையுடன் வந்தீர்கள்?- ஆம்.

சட்டத்தரணி: இப்போ எங்கே இருக்கிறீர்கள்?- வல்வெட்டித்துறையில் இருக்கிறோம். தொண்டமானாற்றில் 2 மாதம் தற்காலிக இடமாற்றம் கிடைத்தது. கடந்த இரண்டு மாதம் சம்பளம் கிடைக்கவில்லை. அப்புத்தளையில் படிப்பித்தேன். பின் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்தேன்.

''நாங்கள் மீண்டும் கண்டிக்குப் போக விரும்பவில்லை. பட்டதுயரம் போதும்; இனிப் படமுடியாது. யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற விரும்புகின்றேன்.

கமிஷனர்: வடக்கில் கடமையாற்ற விரும்புகிறீரா?- ஆம்.

சட்: உம்மைப்போல் வேறு ஆசிரியர்களும், மீண்டும் போகாமல் இருக்கின்றார்களா?- கலவரத்தின்போது வந்த 288 ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற விரும்புகின்றார்கள். வசதியான இடத்திற்கு மாற்றம் தருமாறு கடிதம் எழுதினார்கள். ஆனால் இதுவரை பதில் கிடைக்கவில்லை. அவர்களுக்கும் ஜனவரி மாதம் முதம் சம்பளம் இல்லை'

[க]

### கான்ஸ்டபிள்—

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வந்தார்கள். நாங்கள் ரோட்டில் நின்றோம். அவர்களைக் கண்டதும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குள் சென்றோம். வெளியில் சயிக்கில் உடைத்த சத்தம் கேட்டது. பொலிசார் அங்கு நின்ற சைக்கில்களை தூக்கி அடித்தார்கள். வழக்கமாக 50 சயிக்கில் அங்கு நிற்கும். அன்று 15 சயிக்கிள் தான் நின்றன.

அது ஊழியரின் சைக்கில்கள் அடிக்கவேண்டாம் என்று கூறினோம். அதற்குப் பிறகும் சயிக்கில்களை தூக்கிப்போட்டு, பட்டனால் தாக்கினார்கள். அப்போது கந்தோர் யன்னலிலும் ஒரு குண்டுபட்டது. ரவுன் சொப் மனேஜராக இருந்த, திரு. சுப்பிரமணியம்தான் சயிக்கிலை அடிக்கவேண்டாமெனக் கூறினார்.

சட்டத்தரணி: காணிவலுக்கு வந்த பொலிசார் எந்த நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாரா?- இல்லை.

நில அளவையாளர் தேவராசன் அகஸ்தியர் கலவரம் தொடர்பாக, தான் வரைந்த இலங்கைப்படம், யாழ். மாநர சபை பகுதி ஆகியவற்றை கமிஷனருக்கு விளக்கப்படுத்தினார்.

[க]

## 'சி.எஸ்.கே. சந்தியில் எரிந்த டயர்களை உருட்டிவிட்டனர்'

[யாழ்ப்பாணம்]

''சி. எஸ். கே. சந்தியில் டயர்கள் எரிந்து கொண்டிருந்தது. பொலிஸ் ட்ரக் வந்தது. பொலிசார் இறங்கி எரிந்து கொண்டிருந்த டயர்களை, இங்குமங்குமாக உருட்டிவிட்டார்கள்.''

சன்சோனி கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த யாழ் மாநகர ப. நோ. கூ. சங்க கிளைமனேசர் தம்பு சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சுப்பிரமணியம்மேலும் கூறியதாவது: 13ம் தேதி காணிவலில் பதட்டநிலையிலிருந்தது. 4சிவில் உடையணிந்த பொலிசாருக்கும், பொதுமக்களுக்குமிடையில் சண்டை நடந்தது. 2 பொலிசார் காயமடைந்தார்கள். மற்றவர்கள் அவர்களை அழைத்துச் சென்றனர். முதல்நாள் காணிவலில் நடந்த சம்பவம் தெரியும்.

16ம் தேதி யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கத்திற்கு பக்கத்தால் பொலிஸ் ட்ரக் வந்தது. நான் அன்று வீரசிங்கம் மண்டபத்தடியில் போய்க் கொண்டிருக்கும்போது, பொலிசார் தாக்குவதாகவும், போக வேண்டாமென்றும் என்னிடம் கூறினார்கள்.

நான் வரவு பதிவதற்காகச் செல்லவேண்டும் எனக் கூறினேன். சி. எஸ். கே. சந்தியில் டயர் எரிந்துகொண்டிருந்தது. அதைத்தாண்டி கந்தோருக்குப் போனேன். வரவை பதிவு செய்துகொண்டேன்.

ட்ரக்கில் வந்த பொலிசார் இறங்கினார்கள். அன்று கொள்வனவிற்கு வந்த மனேஜர்கள் அங்கு நின்றார்கள். அவர்கள் பொலிஸைக் கண்டதும், கந்தோருக்குள் சென்றார்கள். பொலிசார் சுற்றிக்கொண்டு வேறுவழியால் வந்தார்கள்.

பொலிஸார் எம். பி.சி.எஸ். வாசலுக்கு வந்ததும் நாங்கள் உள்ளே போனோம். வெடிச்சத்தம் கேட்டது. சரியான சத்தமாக இருந்தது. டாக்டர் பரராஜசிங்கம் வீட்டிற்கு முன்னால் சுட்டார்கள். ட்ரக்கிலிருந்து பொலிசார் இறங்கினார்கள். நாலா பக்கமும் சுட்டுக்கொண்டு ஓடினார்கள். கணக்கு பகுதிமேல் யன்னலிலும் சூடு பட்டது. கந்தோரில் வாசலில் நின்ற சயிக்கில்களை அடித்து உடைத்து நொறுக்கினார்கள். கதவைத் திறந்து ஊழியர்களின் சயிக்கில்களை அடிக்கவேண்டாம் என்றேன். ஒரு பொலிஸ்காரர் துவக்கினால் அந்தக் கதவில் அடித்தார். அவர் கீழே காக்கிக் கால்சட்டையும் மேலே பெனியனும் அணிந்திருந்தார். நான் சொன்னபின் தொடர்ந்து 2 சயிக்கிலை அடித்து உடைத்தனர்.'' சடப் என்று சொல்லி அடித்தார்.

இந்துசங்கங்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், முனியப்பர் கோவிலை பொலிசார் தாகியதை நான் அறிந்திருந்ததாக கூறினார். முனியப்பர் கோவிலுக்கு நேரில் சென்று பார்த்தபோது சகடை விழுந்திருந்ததாகவும் வேறு சேதத்தைக் காணவில்லையென்றார்.

## பொலிஸ்தாக்குதல் பற்றி பத்மராசா சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''நான் நவீன மார்க்கட்டில் நின்றபோது பொலிஸார் ஓடி வந்தனர். ஒருவர் என்னைத் தாக்கி தலையில் பட்டனால் அடித்தார். நான் விழுந்தபின் மீண்டும் எழும்பும்போது, முழங்காலிலும் குதிக்காலிலும் பட்டனால் பொலிசார் அடித்தனர்''

சன்சோனி கமிஷன் முன் நேற்று சாட்சியமளித்த யாழ். நவீன மார்க்கட் மேற்பார்வையாளர் இல்மனுவேல் பத்மராசா மேற்கண்டவாறு கூறினார்.

பத்மராசா மேலும் கூறியதாவது:

''ஆகஸ்ட் 16-ம் தேதி காலை பொறுப்பாளர் சின்னத்தம்பி, மார்க்கட் கதவுகளை மூடச் சொன்னார். பொலிஸார் அடித்து சனங்கள் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தனர் அதனால் கதவுகளைப் பூட்டச்சொன்னார். அங்குநின்ற சுத்திகரிப்பு ஊழியர்களைக் கொண்டு 'கேற்றை'ப் பூட்ட முயற்சித்தேன். ஒரு பக்கத்தால் பூட்டிக்கொண்டுபோனார்கள்.

'திடீரென 'ட்ரக்' கொன்று வந்துநின்றது. 4 அல்லது 5 பொலிசார் இறங்கி ஓடிவந்து என்னை அடித்தார்கள். தலையிலும் காலிலும் அடித்தார்கள். நடக்க இயலாமல் இருந்தது. எழும்பிப்பார்த்தபோது ஒருவரையும் காணவில்லை. சாடையாக நொண்டிக்கொண்டு மார்க்கட் கந்தோரில் சென்று படுத்துவிட்டேன்.

கிறிஸ்டிகூப்பிட்டுக்கொண்டு வந்தார். 'பிளேன் சோடா' கொண்டுவந்து தந்தார். காயத்தால் இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. பொலிசார் அடித்துக்கொண்டிருந்தார்கள். ஆஸ்பத்திரிக்குப்போக மார்க்கட்டினால் இறங்கிவர யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரனின் காரிவந்தது. அதில் ஏறி ஆஸ்பத்திரிக்கு சென்றேன். 2 கிழமை வார்ட்டில் கிடந்தேன். பின் 3 மாதம் சிகிச்சைபெற்றேன். பொலிஸார் யூனிபோமுடன் நின்றார்கள். நம்பரை நான் கவனிக்கவில்லை.'

(க)

## மகாசமாதி

### கந்தையா சுவாமியார்

(குடைச்சாமியார்)

கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த கந்தையா சுவாமியார் (குடைச்சாமியார்) நேற்றைய தினம் மாலை மகாசமாதி அடைந்துவிட்டார் என்பதை அடியார்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இடம்: இ. போ. சபை கோண்டாவில் டிப்போவிற்கு எதிர்வீதியில் அரைமையில் தொலைவிலுள்ளது வீடு. 8516

## வி. பி...

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

யிலிருந்து நீக்குவதென்று நேற்று முன்தினம் கூடிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது!

கட்சியின் நடவடிக்கைகளுக்குப் புறம்பான முறையில் திரு. வி. பொன்னம்பலம் ஈடுபடுகின்றாரென் குற்றச்சாட்டின் மீது அவர் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டார் என்பது தெரிந்ததே.

திரு. வி.பொன்னம்பலத்தை கட்சியிலிருந்து விலக்குவதற்கான அவசரக் கடிதத்தை கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பீட்டர்கெனமன் வட பிரதேச கம்யூனிஸ்ட் கட்சிக்கு அனுப்பவைத்துள்ளதாகத் தெரியவருகிறது. (செ)

## 'வி. பி.' கருத்து

கம்யூனிஸ்ட்கட்சியின் முடிவு குறித்து நேற்றிரவு திரு. வி. பொன்னம்பலத்துடன் ''ஈழநாடு''தொடர்புகொண்டு கேட்டபோது;

''கட்சியிலிருந்துநான் நீக்கப்பட்டதாக எந்த வித உத்தியோகபூர்வமான அறிவிப்பும் எனக்கு இன்றுவரை கிடைக்கவில்லை'' என்று கருத்து வெளியிட்டார்.

யாழ்ப்பாண மாநகர
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
கேள்வி
விண்ணப்பம்

**கிறே பப்ளின்**

எமது மின்தறி ஆலையின் உற்பத்திப்பொருளாகிய, கிறே பப்ள்ன் துணி [Grey Poplin] கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் விலை விபரங்களைக் குறித்து விண்ணப்பிக்கவும்.

முடிவுத் திகதி: 18-2-1978.

சங்கத்தில் ரூபா 250/- வைப்புப் பணம் கட்டிக்கொண்டவர்களின் கேள்விகளே பரிசீலிக்கப்படும்.

பொது முகாமையாளர்.
74/3,
அல்விர்ட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்.
1978 பெப்ரவரி 14. 8514

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தம்பிராஜா

வைத்திலிங்கம் தம்பிராஜா [மலாயன் பென்சனியர்] காலமானார்.

இவர் ராசம்மாவின் அன்புக் கணவரும், நவரோனி (செங்குந்தா இந்துக்கல்லூரி), சிறிரஞ்சனி, தர்மராணி (நீர் விநியோகம் - வடிகால்வாய் நிர்வாக சபை, கொழும்பு), சூரியகாந்தம் [யாழ். வளாகம்], ஆகியவர்களின் அன்புத் தந்தையும், கந்தசாமி, (யாழ்ப்பாணம் சன்மார்க்க மகாவித்தியாலயம்), சிவபாதசுந்தரம் [அச்சகக் கூட்டுத்தாபனம்] ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 227 இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். 8515

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu Telephone 389 Registered as a Newspaper in Srilanka